

# திராவிடநாடு


விலை அணா 2

மலர் 14. இதழ் 52




இப்போது பெட்ரோலில் தானே பெரும்பாலான ஆகாய விமானங்கள் இயக்கப்படுகின்றன! இனி, அது தேவையில்லையாம். சூரிய ஒளியைக்கொண்டு, விமானத்துக்குள்ளேயே உருவாக்கப்படுகிறமின்சாரசக்தியால் விமானங்களை ஓட்டலாம் என்று அமெரிக்காவில், சான்பிரான்சிஸ்கோ நகரில், கடந்த 21ந் தேதி பத்திரிகையாளர்களுக்கு நடத்திக் காண்பிக்கபபட்டதாம். சூரிய ஒளியின்மூலம், ரேடியோக்களைக் கேட்கலாம் என்பது முன்னரே கண்டுபிடிக்கப்பட்டுள்ள சாதனையாகும்! இந்தியாவில், சூரிய ஒளியால் 'சமையல்' செய்யலாம் என்று கண்டு பிடித்திருப்பதுதான் உங்களுக்கு நினைவிருக்குமே?

*

காந்தியார் நினைவு நிதியை சரியான முறையில் விநியோகம் செய்யவில்லை என்றும், அது சம்பந்தமாக மிக்க அதிருப்தி நிலவுவதாகவும், மராட்டிய காங்கிரசு கமிட்டி ஒரு தீர்மானம் போட்டுள்ளது.

*

ரஷ்யமொழியில் 'டைப்' அடித்தால், ஆங்கிலத்தில் அதன் மொழிபெயர்ப்பு கிடைக்கும்படியாக ரஷ்யாவில் ஒரு மிஷின் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இதனால், செய்திப் போக்குவரத்துக்களை நடாத்திக்கொள்ள ஒரு நாட்டுக்கும் ஒரு நாட்டுக்குமிடையே மிகவும் வசதியேற்படும் என்று கருதப்படுகிறது.

*

குருடர்களுக்குக் கண்பார்வை திரும்பச் செய்ய இறந்தவர்களுடைய கண்ணின் மணிகள் மட்டுமே பயன்படுமென்றுதான், இதுவரை கருதப்பட்டு வருகிறது. இப்போது ஜப்பானிலுள்ள ஒரு டாக்டர், கோழிக்குஞ்சின் கண்ணின் மணிகூடப் பயன்படும் என்று கண்டுபிடித்துள்ளார். டாக்டர் குவாபாரா எனும் அவர் 14-வயதுள்ள குருட்டுப்பெண்ணுக்கு இந்தச் சிகிச்சையைச்செய்து, திருப்திகரமாயிருப்பதாக அறிவித்துள்ளார்.

*

ஒருவர் பேசியதை அச்சடிக்க வேண்டுமென்றால், அதைக் குறிப்பெடுத்துவந்து, எழுதி, கம்பாசிடர்களிடம் கொடுத்தல்லவா, பிறகு அச்சேற்றுகிறோம். அந்தச் சிரமம் கூட இல்லாமற் செய்ய, ஒரு பிரெஞ்சுக்காரர் ஒரு இயந்திரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். யாராவது பேசினால், உடன் அந்தப் பேச்சுக்கள் அச்சுக் கோர்க்கப்படுமாம்! எங்காவது வெளிநாட்டில் ஒருவர் பேசினால் கூட, அப்பேச்சு 'வானொலி' மூலம் கிடைக்குமானால், உடனே அதை அச்சுக்கோர்க்க முடியுமாம்! அத்தகைய விந்தையை இந்த இயந்திரம் செய்யுமாம்.

*

புதுடில்லியில், வெளிநாட்டுத் தூதுவர்களின் காரியாலயங்கள் இருக்குமிடத்துக்கு சாணக்கியபுரி என்று பெயரிடப்பட்டுள்ளதாம். இந்த இடத்தில், ஒவ்வொரு வெளிநாட்டினரும், தம்முடைய அலுவலகங்களைக் கட்டிக்கொள்ள பணம் கொடுத்து மனைகளை வாங்கியுள்ளனராம். அப்படி வாங்கிய மனைகளில் சொந்த கட்டிடங்கள், எழும்பி வருகின்றனவாம்.

*

பர்மியப் பிரதமரைப் பார்க்க விரும்பினாளாம், டிராட்மேன் எனும் ஜெர்மனிய மாது! இவர், உலகச் சுற்றுப்பயணம் வந்தவர். பிரதமரின் பியூன் தடுக்கவே அவனை ஓங்கி அறைந்து தள்ளிவிட்டு, உள்ளே போனாளாம். அதற்காக வழக்குத் தொடரப்படவே, 23-வயதுள்ள அந்தப் பெண்ணுக்கு ரங்கூன் நீதிமன்றம் 75-ரூபாய் அபராதம் விதித்தது. அபராதத்தைக் கட்டிவிட்டு, அப்பெண் இப்போது ஜப்பானுக்குப் போயிருக்கிறாள்!

*

1938ல் பீகாரில் பெருத்ததோர் பூகம்பம் நிகழ்ந்தது, பல்லாயிரக் கணக்கானோர் வீடிழந்தனர், பிணமானோர் தொகை ஏராளம். ராஜேந்திர பிரசாத் தலைமையில் நாடு முழுமையும் நிவாரண நிதிகள் சேர்க்கப்பட்டன. இளமையும் துடிதுடிப்பும் பெற்றிருந்த ஜவகர்லால் நேரு, பீகாருக்குள் சென்று மக்கள் படும் அவதிகளைத் துடைக்க என்னென்ன செய்யலாம் எனும் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருந்தார். அந்த நேரத்தில், காந்தியார் அறிக்கையொன்று விடுத்தார். "தீண்டாமை எனும் பாபம் நீடிப்பதற்கு கடவுள் கொடுத்த தண்டனைதான் இந்தப் பூகம்பம்", என்பதுதான் அவருடைய அறிக்கையின் சாராம்சம். தீண்டாமை கொடிதுதான்! ஆனால், அதற்காகப் பூகம்பத்தையும் அதனையும் ஒட்டவைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதா? மழை பெய்யாததற்குக் காரணம் பாபிகள் அதிகரித்துவிட்டதுதான், என்று வைதீகர்கள் கூறுவதற்கும், இதற்கும் என்ன வேற்றுமை?

காந்தியாரின் அறிக்கையைக் கண்டதும் ஜவகர்லால், தன் மனதில் தோன்றியதை அவர் நூலில் எழுதுகிறார். "காந்திஜீயின் இந்த அறிக்கையைக் கண்டதும் திடுக்கிட்டேன். மனிதர்களின் வழக்கம் அல்லது தவறுதல்களின் காரணமாகவே பூகம்பம் ஏற்பட்டதென்பதை எப்படி நம்ப முடியும்? பாபத்துக்கேற்பட்ட பரிகாரம்! என்று, இரண்டிற்கும் முடிச்சுப் போடுவது, என்பது நம்மை பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட உலகில் இருப்பவர்களாகவன்றோ கருதச் செய்கிறது. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட, அறிவுரை கொளுத்திய ப்ரூனோ போன்றவர்களைக் கொளுத்தவன்றோ செய்தது இந்த அறியாமை?"

*

சகாரா பாலைவனத்தில், மண்ணுக்கடியிலிருந்து எண்ணெய் கிடைக்குமென்று பிரெஞ்சு நிபுணர்கள் முயன்று ஜூன் 17-ந் தேதியன்று கண்டுபிடித்திருக்கின்றனர்.

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14 :: இதழ் 52
1—7—56

# அழிவைத் தடுக்க!

அழகான கத்தியைக்கொண்டு பழமும் அறுக்கலாம், பலரைக் குத்தியும் சாய்க்கலாம்.— என்பதுபோல, அணுசக்தியைக்கொண்டு விஞ்ஞான அற்புதங்களையும் செய்யலாம், நாடுகளை அழித்தும் காட்டலாம் என்று விஞ்ஞானிகள் கூறி வருகிறார்கள்.

இரண்டாவது உலகப் பெரும்போர் முடியும் தருவாயில் ஜப்பான் மீது, அணுகுண்டினை வீசி, அகில உலகையும் நடுங்க வைத்தது அமெரிக்கா. அது முதல், ஒவ்வொரு வல்லரசும், அந்த ஆபத்தான ஆயுதம் தம் வசமும் இருக்கவேண்டுமென்கிற ஆசை கொண்டு, வெற்றியும் பெற்றுவிட்டன.

அமெரிக்கா, அடிக்கடி புதிய புதிய குண்டுகளைத் தயாரித்து வெடித்துப் பார்க்கிறது— உனக்கென்ன நான் மட்டமோ என்று கூறுவதுபோல ரஷ்யாவும் பல குண்டுகளை வெடித்துக் காட்டி வருகிறது — 'உங்களைப்போல நானும் கண்டுபிடித்துவிட்டேன்' என்று பிரிட்டனும் வெடித்துப் பார்க்கும் சோதனைகளைச் செய்து வருகிறது.

மாண்டிபோலே எனுமிடத்தில் அண்மையில் பிரிட்டன் நடத்திய சோதனையைக் கண்ட இங்கிலாந்து நாட்டு மருத்துவக் கௌன்சில், எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது — "இப்படி வெடித்துக்கொண்டே போவதால், அணுக் கதிர்கள் காற்றோடு கலந்து விடுகின்றன. அந்தக் காற்றுப் பரவினால், அதனால் ஏற்படும் விபரீதங்களைச் சொல்லவும் முடியாது. மனித இனமே, மாளாத தொல்லைக்கு ஆளாக வேண்டியதுதான்," என்பதாக.

ஜப்பானிலிருந்து வரும் செய்தி இதை உண்மையென்று தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. முன்பு, அணுகுண்டுச் சோதனையின் விளைவாக, கடலிலே மீன் பிடிக்கச் சென்றிருந்த ஜப்பானியர் பலர் எக்கதிக்காளாயினர் என்பதைக் கண்டோம். அணுக் காற்று பரவிய இடத்தில் அகப்பட்ட மீன்களைத் தின்றால்கூட, அனர்த்தம் விளைவதாகச் செய்திகள் வந்தன. கடந்த வாரம், ஜப்பானில் பல இடங்களில் வெந்நீர் மழை பொழிந்ததாம். தாங்க முடியாது தத்தளித்தனராம், மக்கள்.

விஞ்ஞானிகள், காற்றோடு கலக்கும் அணுக் கதிர்களால் இதுபோலப் பலவிதமான ஆபத்துக்கள் விளையக்கூடுமென்று எச்சரிக்கின்றனர்— அணு குண்டு ஆயுதப் பரிசோதனையைக் கைவிடுமாறும் வேண்டுகின்றனர்.

அவர்களுடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பதுபோல, அமெரிக்க வெளிநாட்டு அமைச்சரும், பிரான்சு வெளிநாட்டு அமைச்சரும், ஒரு கூட்டறிக்கை விடுத்துள்ளார்கள். அணுகுண்டு தயாரிப்பதை நிறுத்துமாறு அவர்கள் உலகுக்கு வேண்டுகோள் விடுப்பது போலவே, சென்ற வாரம் ருஷ்யப் பிரதமர் புல்கானினும், வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஒவ்வொருவரும் வேண்டுகோள் விடுத்துக் கொள்ளும் கட்டம் வந்திருப்பது, உண்மையில் மகிழக்கூடியதே. ஆனால், இப்படி வேண்டுகோளனுப்பும் இவர்கள் வசம்தான், அணுகுண்டு ஆபத்திலிருந்து உலகைக் காக்கும் பொறுப்பு உள்ளதென்பதை அனைவரும் அறிவர்.

அணுகுண்டுச் சோதனையில் புதிய முயற்சிகளைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ள பிரிட்டன், பத்தாண்டுத் திட்டம் ஒன்று போட்டு, அணுசக்தியைத் தொழில் துறைக்குப் பயன்படுத்தும் முயற்சிகளையும் இன்னொரு பக்கத்தில் செய்து வருகிறது. இந்தத் திட்டம் முடிவுறுமேயானால், ஆண்டொன்றுக்கு 50 லட்சம் டன் நிலக்கரியால் உண்டாக்கக்கூடிய பலனைப் பெறலாமாம்.

அணுசக்தியால் விளையும் நல்ல காரியங்களையும் சரி, கெட்ட காரியங்களையும் சரி, ஒவ்வொரு நாடும் மிக்க இரகசியமாகவே வைத்துக்கொண்டுள்ளது. அதுவும், தன்னுடைய நாட்டு விஞ்ஞானிகளைக்கொண்டு, ஆராய்ச்சிகளில் வெற்றி பெற்று வருகிறதே ஒழிய, ஒருவருக்கொருவர் கலந்து பேசியல்ல. அவ்வளவு பூடகமாக, இந்த அணுசக்தி இரகசியங்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

அமெரிக்க விஞ்ஞானியொருவர் அண்மையில் அறிவித்ததுபோல, உலக வல்லரசுகள் ஒவ்வொன்றும் இந்த அணுசக்தி இரகசியங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள முன்வந்துவிட்டால், உலகில் உண்டாகியிருக்கும் பயமும் பீதியும் ஓரளவுக்கு அடங்கக்கூடும். அப்படியொரு நன்னாள் வருமா? ★

# வீம்பும் வேதனையும்

ஏனோ தெரியவில்லை, வயலில் புயலென்றாலும், வறுமையால்வாடுவோர் கிளர்ச்சிகள் புரிகின்றனரென்றாலும், தோள்தட்டி, உமது துடுக்கடக்குவேன் தெரியுமா என்று எச்சரிக்கை விடுப்பது இந்தக் காங்கிரஸ் அரசுக்கு பழக்கமாகியே விட்டது. என். ஜி. ஓ. சங்கத்தினருக்கு, இப்படியொரு, எச்சரிக்கை இந்தக் கிழமை காமராஜர் அரசால் விடுக்கப்பட்டிருக்கிறது.

வேறு வழியில்லாததால், தமது கண்டனத்தைக் காட்ட ஜூலை முதல் நாள் தரப்படும் சம்பளத்தை வாங்காமலிருப்பது என்று முடிவு செய்திருக்கிறது, என். ஜி. ஓ. சங்கம். இது, எவ்வளவு பெரிய தியாக காரியம் என்பதை என். ஜி. ஓக்களின் இல்லங்களைப் பற்றி அறிந்தோருக்குப் புரியும். அன்று, வீட்டு வாயிலில் வந்து நிற்கும், வாடகைக்காரரையும், பால்காரரையும், மளிகைக் கடைக்காரரையும், வேறு பலரையும் சமாளிப்பதென்பது சாதாரண காரியமல்ல. ஆயினும், தமது குறையைத் தெரிவிக்க இந்த சாத்வீக வழியைக் கையாள்வது என்று முடிவு செய்துள்ளார்கள். இதற்கு, எச்சரிக்கை விடுகிறது, அரசாங்கம்.

தன்னுடைய தவறின் காரணமாக சர்க்காரின் வரிப் பணத்தில் ரூபாய் 2 லட்சத்தைத் தெரியாத்தனமாகச் செலவழித்ததாகச் சட்ட சபையில் தெரிவித்தாரே, அந்த நிதி மந்திரி சுப்ரமணியம் தெரிவித்தாராம், "என். ஜி. ஓக்களின் சங்கடம் எங்களுக்குத் தெரியாமலில்லை. அவர்களது கோரிக்கையைக் கவனிப்பதென்றால் கிட்டத்தட்ட இரண்டு கோடி தேவைப்படுகிறதே. எங்கே போவது?", என்று.

எங்கே போவது; வருமான வரியினையும், வியாபாரச் சலுகைகளையும் பெற்று கோடி கோடியாக கொட்டி அளந்துகொண்டிருக்கும் டில்லியிடம் போய்க் கேட்பது— அதைவிட என்ன வேலை, இவர்களுக்கு? 50,000 பேருடைய வாழ்க்கையைச் செப்பனிட வேண்டுமென்று இதயசுத்தி யிருந்தால், எத்தனையோகமிட்டிகளுக்கு கோடி கோடியாக செலவழிக்கும் டில்லியினையா,கேட்கக்கூடாது. இவர்களுக்கென்ன கஷ்டம்? டில்லிக்குத்தான் இந்தத் தொகையென்ன பெரிதா, ஆண்டுக்கு 200 கோடி ரூபாயை இராணுவத்துக்கென்று அள்ளி வீசுகிறார்களே. அதிலே, இதைச் சரிகட்டிக்கொள்ளக் கூடாதா? சமாதான வீராயிற்றே, நேரு. சகல நாடுகளும் போர்ச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்று சதா சாந்தம் பேசும் அவருக்கு இது சங்கடமான காரியமா,என்ன?

எனினும் ஏதோ ஒரு 'பயத்தால்' டில்லியைப் போய்க் கேட்க அஞ்சி, இந்தச் சூராதி சூரர், எங்கே போவது எனக் கேட்டார். அப்படிக் கேட்டவர்கள்தான் இன்று "என்.ஜி.ஓக்களே, இப்படியெல்லாம் நேரடி நடவடிக்கையில் நீங்கள் ஈடுபடாமலிருந்தால் உங்கள் மனுவைக் கவனிக்கிறோம்", என்று எச்சரிக்கின்றனர்.

"ஐயா, அதிகக்கூலி போட்டுக் கொடுங்கள்", என்று கேட்கும் ஏழையைப் பார்த்து, "டேய், என்ன திமிரடா?", என்கிறார் முதலாளி. ஏழை, எரிமலையானதும், "ஏய், அந்த சங்கக்காரர்கள் தொடர்பை விட்டுவிட்டு வந்தால் தான் உன் பேச்சைக் கேட்பேன்," என்று மிரட்டுவதாகப் பல செய்திகளைப் படிக்கிறோம். அந்தத் தனிப்பட்ட முதலாளிக்கும், 'மாடல்' சோஷியலிசத்தை மலிவு விக்கப் போவதாகக் கூறும் இந்த காங்கிரஸ் அரசுக்கும் என்ன வித்தியாசம்? ★

# ம. பொ. சி. பொன் விழா

**"சர்வ கட்சித் தலைவர்களின் சிறப்புரைகளும், பரிசுகளும் என் மீது பொறுப்புணர்ச்சியை சுமத்தி விட்டதை உணர்கிறேன். எனக்கு அளிக்கப் பட்டுள்ள பண முடிப்பும், பட்டயமும் எனக்கு ஓய்வு தருவதற்கல்ல,"**

என்று, ம. பொ. சி. அவர்கள், தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு பதிலுரைத்தபோது குறிப்பிட்டார். அவர் குரலில், பொது வாழ்க்கையின் மீது அவருக்குள்ள பற்றும், ஆர்வமும் தென்பட்டது. அண்ணாமலை மன்றத்தில் ஜூன் 27ந் தேதி கொண்டாடப்பட்ட அவருடைய பொன் விழா, பொது வாழ்வுத் துறையில் குறிப்பிட்ட கொள்கைக்காக நேர்மையோடு பணியாற்றும எவரையும் மக்கள் மன்றம் மதிக்கும் என்பதை எடுத்துச் சொல்லிய விழாவாகும். நடிகச் செல்வர் டி. கே. சண்முகம், போன்றவர்களின் முயற்சியால் மிகவும் பெருமிதமாக நடைபெற்ற இவ்விழாவில், ரூபாய் 50,000 கொண்ட பண முடிப்பை சேலம் வேணு அவர்கள் அளித்தார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு புதிய கார் ஒன்றை அளித்தார். 'மூனுஸ்', ஒரு டேப் ரிகார்டரும், பலர் பல பரிசுகளும் அளித்தனர், தோழர்கள் ப. ஜீவா, தேவன், பி. டி. ராஜன், டாக்டர் மு. வ. எஸ். குருசாமி, தெ. பொ. மீ, அண்ணாமலையார், எம். ஜி. ஆர், கே. ஆர். ஆர், எஸ். டி. சுந்தரம், ஜி. உமாபதி, ஏ. பி. நாகராசன் முதலிய பல்வேறு துறையினரும் கலந்து கொண்டு பாராட்டினர். திருச்சி நிலக்கிழார் ஒருவர், ம. பொ. சி. அவர்கட்கு ஒரு ஏகர் நிலதானம் செய்தார்.

வாழ்க்கையின் பல துறைகளிலுள்ளோரும், ஈடுபட்டு, தத்தமது அன்பினைக் காட்டிக்கொள்ளும் வாய்ப்பாக அமைந்தது இவ்விழா. நாமும், நமது அன்புகலந்த வாழ்த்துதல்களையும் பாராட்டுதல்களையும் ம. பொ, சி. அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வாழ்க, ம. பொ. சி. வளர்க தமிழ் அறம்.

**தித்திக்கும் தேனேடு!**

சொல்வீரர்
**ப. உ. சண்முகம்**
தீட்டிய
**அற்புத ஆயுதம்**
அரிய நூல்
**விலை அணா எட்டுதான்!**
**இராணி பதிப்பகம்**
திருவண்ணாமலை
(வ. ஆ.)

# டமாஸ்கஸ் முதல்....

**தம்பி,**

மலாய் நாட்டு நண்பரொருவர் என்னைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார்—இங்கு நாகைப் பகுதியில் நமது கழகத்தில் ஆர்வத்துடன் பணியாற்றிக் கொண்டிருந்தவர் — ஆறேழு ஆண்டுகளாக அங்கு சென்று வாழ்ந்து வருகிறார். அவர் மலாய் நாட்டிலே, அண்ணா! நமக்கு மகத்தான செல்வாக்கு மலர்ந்திருக்கிறது; அங்கு, இங்கு மாநாடுகளிலே காணப்படும் கொடி அலங்காரக் காட்சி சாதாரணமாகவே ஊர்களில் தெரியும் என்று மிக்க ஆர்வத்தோடு கூறிக் கொண்டிருந்தார். உடனிருந்து பேசிக்கொண்டிருந்த நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி மலாய் நாட்டிலே, எந்தக் கழகம் செல்வாக்குடையது? திராவிட முன்னேற்றக் கழகமா, திராவிடர் கழகமா? என்று கேட்டார். வந்த நண்பர் அங்கு அந்த வித்தியாசமே கிடையாது என்றார்!

கடல் கடந்தால் கடுவிஷம் குறையும் போலும் என்றெண்ணிக் கொண்டேன். நண்பர், மலாய் நாட்டிலே இருப்பதால், இங்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்டத் திராவிடர் கழகம் போதாதா என்று காமராஜர் இறுமாந்து கூறும் நிலைமை இருப்பது தெரியாது. எனவே, தூய உள்ளத்துடன், எங்கள் பகுதியில் வித்தியாசம் கிடையாது என்றார்.

அவ்விதமான தூய உள்ளம், இங்கும் சிலருக்கு இருக்கிறது, தம்பி, உன் பொறுமையும் பொறுப்புணர்ச்சியும், தொண்டும் தோழமைப் பண்பும்தான், **அந்தச் சிலர் பலர் ஆவதற்கு வழி செய்ய வேண்டும்.**

மலாய் நண்பர், அரியலூரிலும் அம்பாசமுத்திரத்திலும், திருநெல்வேலியிலும் தில்லையிலுமே பேசிக்கொண்டிருந்தால் என்ன பலன் என்று எண்ணிக்கொண்டார் போலும்-எனவே அவர் "அண்ணா! மலாய் நாட்டுக்கு வாருங்களேன். சிங்கப்பூர், பினாங்கு, ஈப்போ, கோலாலம்பூர் ஆகிய இடங்களிலெல்லாம் வந்திருந்து நமது தோழர்களிடம் விஷய விளக்கமளிக்க வேண்டாமா? அவர்களெல்லாம் எத்துணை ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்பதை அறிவீரா? என்று கூறி என்னை மகிழ்வித்தார். நானோ அவர் பேசிக்கொண்டிருக்கையில், **டமாஸ்கசில்** இருந்தேன்!!


இவர் என்னை இதோ அருகே இருக்கும் சிங்கப்பூர் அழைக்கிறார்—நானோ அங்கும் இன்னமும் சென்றிட முடியாத நிலையில்தான் இருக்கிறேன்—ஆனால் தம்பி, உன் துணைகொண்டு எந்தத் திராவிடத்தை விடுதலை பெற்ற நாடாக்க முடியும் என்று நான் மனதார நம்பிக்கொண்டு, சக்திக்கேற்ற வகையிலும், வாய்ப்புக்கிடைக்கும் அளவிலும் பணி செய்து கொண்டிருக்கிறேனோ, அந்தத் திராவிடத்தை இன்று வடநாட்டுடன் பிணைத்து ஏகாதிபத்தியம் நடத்தும் நேரு பண்டிதர், எங்கே சென்றிருக்கிறார், என்பதை எண்ணிப் பார்த்தேன், ஒரு கணம், திகைத்தே போனேன்.

எங்கள் பண்டிதர் எங்கே இருக்கிறார்? **இலண்டனில்.**

எமது பண்டிதர் எங்கெங்கு சென்றார்? **பாரிஸ், மாஸ்கோ, பீகிங், பெல்கிரேட், ஏதன்ஸ்!!** — என்றெல்லாம் எக்காளமிடும் காங்கிரஸ் நண்பர், மனக்கண் முன் தோன்றினார்; பண்டிதர் சென்றுள்ள பயணத்தை நினைவூட்டினார், நானும் **டமாஸ்கஸ்** சென்றேன்.

**டமாஸ்கஸ்!** பன்னெடுங்காலமாகக் கவர்ச்சியூட்டும் காதைகளுக்குப் பிறப்பிடமான வசீகர மிக்க நகரம். மதிலேறிக் குதித்து மான்விழியாளிடம் மதுர மொழி கேட்டு இன்புற்று, காட்சி கண்டு கடுங்கோபம் கொண்ட கொற்றவனின் கூர்வாளுக்கு இரையான குமரர்கள் உலவியதோர் இன்பபுரி என்கின்றனர் அந்த அழகு நகரை!

அந்த நகரில்—**டமாஸ்கஸ்** நகரில் நேரு பண்டிதர் விருந்துண்டார்—ஊர் சிறப்புப் பற்றி உபசரிப்பு



நடத்தியோரிடம் உவகையுடன் எடுத்துரைத்தார். அவர்களுக்கு வந்துற்ற இன்னல் அனைத்தையும் துடைத்திடுவதாக வாக்களித்தார். அம்மட்டோ! விடுதலை பெற்ற நாடுகளின் முன்னேற்றம் குறித்தும், சிக்கிக் கிடக்கும் நாடுகளின் விடுதலைக் கிளர்ச்சி வெற்றி பெறுவதற்கான வழிவகை பற்றியும் எடுத்துரைத்தார்! என்னே பண்டிதரின் பரிவு! எத்துணை ஆர்வம் காட்டுகிருர், விடுதலைப் பிரச்சினையில்! எங்கோ கிடக்கும் டமாஸ்கஸ்தானே—நமக்கென்ன இங்கு பந்தமா, பாசமா, ஒட்டா உறவா என்று அலட்சியம் காட்டினரில்லை; எவ்வளவு பரந்த நோக்குடன், பாரில் எங்கு எழும் பிரச்சினை யாயினும், மக்களின் உரிமை அதிலே தொக்கி இருக்கிறதென்ருல், நான், ஆர்வம் காட்டுவேன், அப்பிரச்சினையை எனதாக்கிக் கொள்வேன் என்ற கருத்துடனல்லவா அவர் பேசியிருக்கிருர் என்றெல்லாம் எண்ணி பிரமுகர்கள் களிப்படைந்திருப்பர்; "பழச்சாறு பருகுக! சிற்றுண்டியை எடுத்துக்கொள்க!" என்று உள்ளன்புடன் உபசரித்திருப்பர்!

டமாஸ்கஸ்! டமாஸ்கஸ்!! கவர்ச்சிகரமான நகரம்! — என்று அவரும், நேரு! நேரு! புகழ் மிக்க தலைவர்!—என்று அவர்களும் பூரிப்புடன் பேசியபடி, விருந்து வைபவத்தில் கலந்து களிப்படைந்திருப்பர்!

"வயது என்ன?"

"நூறு"

"நூறு வயதா! பாட்டீ! இந்தத் தள்ளாத வயதில், உனக்கேன் இந்தத் தொல்லை? பேரனும் பேத்தியும் பார்த்துக்கொள்ள மாட்டார்களா? உனக்கென்ன வந்தது?

"அட அறிவற்றவனே! பேரனும் பேத்தியும் மட்டுமரியாதையுடனும், உரிமையுடனும் வாழத்தானே நான் இந்தப் பாடுபடுகிறேன்; என் மக்களுக்காக நான் தானே பாடுபட்டாக வேண்டும்; பெற்று வளர்த்துப் பெரியவர்களாக்கியான பிறகு, எந்தப் பேயாட்சியிலே வேண்டுமானாலும் இருந்து போகட்டும் என்று விட்டு விடுவார்கள்! ஏறக்குறைய, என் பேரன் வயதுதான் இருக்கும் உனக்கு. நீ, போய் கேட்கிருயே, உனக்கேன் வம்பு என்று! இதுவா நியாயம்..."

"உம்! சரி, சரி, உன் வாயைக் கிளறினுல், நீ மேலும் மேலும் பேசுவாய்...சரி...உன் வயதை உத்தேசித்து எனக்கு வருத்தம் வேறென்ன. இந்த வயதிலே, 'ஜெயில்' வாசமா என்று எண்ணும்போது எனக்குத் துக்கம்... வேறென்ன..."

"பைத்யக்காரனுக இருக்கிருயே! ஜெயிலுக்குப் போகப்போவது, நான். உனக்கேன் துக்கம்?"

"மகராஜீ! உன்னேடு பேசி என்னுல் வெல்லமுடியாது. இருக்கட்டும், நீ சிறை செல்வதாலே, என்ன பலன் கிடைத்துவிடப் போகிறது, சொல்லேன் கேட்போம்......"

"நீ கேலிக்காகக் கேட்டாலும் சரி, உண்மையாக விஷயம் தெரிந்துகொள்ளும் எண்ணத்தாலே கேட்டாலும் சரி, எனக்கென்ன, நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடுகிறேன். படுகிழமாயிற்றே — நடக்கக்கூட முடியாத வயதாயிற்றே—நீ ஜெயிலுக்கு போய் என்ன சாதிக்க முடியும் என்றல்லவா கேட்கிருய் — சொல்கிறேன் கேள், எனக்கோ வயது நூறு. காண வேண்டிய காட்சிகளைக் கண்டாயிற்று—இனி நான் தேடிப் பெற வேண்டியது எதுவும் இல்லை — கீழே உதிர்ந்து விழ வேண்டிய சருகு நான்—வீழ்ந்ததும் மண்ணேடு மண்ணுகிவிட வேண்டிய சரீரம் இது — இப்படிப்பட்ட நானே நாட்டுக்காக, உரிமைக்காக, அநீதியை எதிர்த்து, அடக்குமுறையை துச்சமாகக் கருதி, அறப்போரில் ஈடுபட்டு, சிறை செல்கிறேன் என்ருல், இந்த நாட்டிலே உள்ள வீரர்கள், வாலிபர்கள், இளம் பெண்கள், எல்லாம், கிழவி அல்லவா வீரமாகக் கிளம்பி, தீரமாகப் போராடி, சிறை சென்ருள், நாம் கல்லுபோல் உடலும், பாம்பைக் காலால் மிதித்துக் கொல்லும் வயதும் கொண்டிருக்கிரேம், நாமுண்டு நம் குடும்ப சுகம் உண்டு என்று இருக்கிரேமே, எவ்வளவு கோழைத்தனமும் சுயநலமும் நம்மிடம் குடி கொண்டிருக்கிறது என்று எண்ணி வெட்கித் தலைகுனிவார்கள் ஒரு விநாடி, பிறகு வீறு கொண்டெழுவர், விடுதலைப் போரிலே ஈடுபடுவார்கள், விடுதலை கிடைக்கும், உரிமை நிலைக்கும்! அறம் தழைக்கும்! மகனே! அதற்காகத்தானடா, நான் இந்த வயதிலே சிறை செல்கிறேன்."

மராட்டிய மண்டலத்திலே, இப்படி ஒரு உரையாடல் நடைபெறவில்லை—ஆனுல் 100-வயது சென்ற ஓர் மூதாட்டி பம்பாய் நகர் மராட்டியருக்கு என்பதற்காக நடத்தப்படும் கிளர்ச்சியில் ஈடுபட்டுச் சிறை சென்ருர். அதிகாரியும், அந்த மூதாட்டியும் சந்தித்தபோது, பார்வையிலேயே, இந்த உரையாடல் நடைபெற்றிருக்கத்தானே வேண்டும்.

## டமாஸ்கஸ், இந்த மூதாட்டியை அறியாது!

நூறுண்டு வயதுள்ள மூதாட்டியும் துணிந்து சிறை செல்லும் அளவில் பம்பாயில் அறப்போர், நேரு பண்டிதரின் ஆட்சியிலே நடைபெற்றுக்கொண்டிருப்பதை டமாஸ்கஸ் அறிந்திராது.

துப்பாக்கியின் துணையுடன் துரைத்தனம் நடத்தி வரும் தூயவர்தான் நேரு என்பதை டமாஸ்கஸ் அறியாது!

டமாஸ்கஸ் நகரப் பிரமுகர்கள் நேருவின் புகழொளியில் மயங்கி, அவர் ஏறிவரும் விமானம் சோவியத் தந்ததாம், அவர் செல்ல இருக்கும் இடம் சீமையாம், அங்கு அவருக்கு உள்ள அலுவல்களிலே ஒன்று மஹாராணியாருடன் விருந்து சாப்பிடுவதாம், குபேரபுரி என்று கொண்டாடப்படும் அமெரிக்காவில் அவருக்குக் கோடி கோடியாக டாலர்கள் கொட்டுகிருர்கள் என்ற இந்தச் செய்திகள் கேட்டுச் சொக்கிப்போயுள்ளவர்கள்! எனவே அவர்கட்கு நேருவின் ஆட்சியிலே உரிமை முழக்க மிடுவோர் பிணமாவதும், ஊராள் முறையிலே உள்ள ஊழலையும் ஊதாரித்தனத்தையும் கண்டிக்க முற்படுவோர் கொடுமைப்படுத்தப்படுவதும், நூறு ஆண்டு வயதான மூதாட்டிகள் சத்யாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை செல்வதும், தெரியாது — தெரிந்து கொள்ளச் செய்வதற்கு, வழியேகூடக் கிடையாது என்று கூறலாம் காரணம், அவர்கட்கு தரப்படும் 'செய்திகள் அத்தனையும், நேருவின் புகழ்பற்றியனவே தவிர, அந்தப் புகழ்த்திரைக்குப் பின்னுல் உள்ள "பம்பாய்ச் சம்பவங்கள்" அல்ல! எனவே கவலையற்று, யாரேனும் ஏதேனும் துணிச்சலாகக் கேட்டுவிடுவார்களோ என்ற பயமற்று, நேருபண்டிதரால், டமாஸ்கஸ் நகர் விருந்தின்போது, உரிமை, விடுதலை, சமாதானம்,

(15-ம் பக்கம் பார்க்க)

ஒரு உரையாடல்

# பக்தியின் பெயரால்!

"ரசமான செய்தியொன்று தெரியுமா, உனக்கு?"

"சொன்னால் தானே தெரியும்..."

"பகத், ஒரு பிரபல மிட்டாய் வியாபாரி..."

"கேட்கும்போதே நாக்கு ஊறுகிறதே"

"இப்படி உன்னைப்போல எத்தனை நாக்கு ஊறிய ஆசாமிகள் இருப்பார்கள். அவர்களால், அவன் கடைக்குப் பலமான வியாபாரம்......"

"எந்த ஊர் என்று சொன்னாய்?"

"ஓகோ, ஊரை இன்னும் சொல்லவில்லையா; வடக்கே; ராஜ்கோட்..."

"மார்வாடிகள் ஊரா?"

"ஆமாம், பகத்தும் ஒரு மார்வாடிதான். வியாபாரம் பெருத்து, வருமானம் குவியவே, தகவல், வருமானவரி இலாகாவுக்குப் போயிற்று. அவர்கள் எழுதினார்கள், 'ஐயா, பகத்! உம்முடைய வருமானத்தை இத்துடன் நாங்கள் அனுப்பியிருக்கும் நமூனாக்களில் குறிப்பிட்டு அனுப்புங்கள்...' என்பதாக"

"சேட் என்ன செய்தார்?"

"உத்தரவைக் கண்டதும், அவருக்குப் பெருமூச்சு வந்தது..."

"நமூனாக்களைத் திருப்பி அனுப்பவில்லையோ?"

"அது முடியுமா? சர்க்கார் உத்தரவாச்சே; அதனால் திருப்பி அனுப்பினார்..."

"என்னவென்று எழுதி...?"

"ராமா!—என்று எழுதி..."

"என்ன சொல்கிறாய்?"

"ஆமாம், நண்பா! அந்த நமூனாக்களுள், ஊர், பெயர், வருமானம், இப்படிப் பல விவரங்கள் கேட்டுக் கேள்விகள் இருக்குமல்லவா? அவைகளுக்கெதிரே, எல்லாக் கேள்விகளுக்கும் ராமா ராமா என்றே எழுதி அனுப்பிவிட்டாராம்..."

"வேடிக்கையாயிருக்கிறதே"

"சேட்டல்லவா? அதனால் புத்திசாலித்தனமாக இதைச் செய்தார். நடப்பதுதான் இராமராஜ்யம் என்று சொல்லுகிறார்களே, நாம், இராமா இராமா என்றே எழுதிவைப்போம், என்ன செய்யப்போகிறார்கள் நம்மை என்கிற தைரியத்தில்..."

"அதிகாரிகள், என்ன செய்தார்கள்?"

"உடனே நடவடிக்கை எடுத்து, சர்க்காரின் உத்தரவை நிறைவேற்றத் தாமதித்ததோடு ஏமாற்றவும் துணிந்ததற்காக இன்ன செக்ஷன்படி உம்மீது வழக்குத் தொடர்ந்துள்ளோம்......என்றெல்லாம் செய்திருப்பார்கள் என்றுதானே எண்ணுகிறாய்? அதுதான் இல்லை. மரியாதையோடு, இன்னொரு உத்தரவை அனுப்பினார்கள். 'நீ நமூனாக்களைப் பூர்த்தி செய்து அனுப்பாததுகூடப் பரவாயில்லை. உன்னுடைய வரவு செலவுக் கணக்குகளை உடனே அனுப்பிவை' என்பதாக"

"அதற்கு என்ன செய்தார்?"

"உடனே, ஒரு பெரிய மூட்டையாகக் கட்டி அனுப்பிவைத்தார்"

"என்ன மூட்டை?"

"வரவு செலவு கணக்கு நோட்டுகளின் மூட்டையென்றுதான் வருமான வரி இலாகாவினரும் நினைத்தார்கள். பிரித்துப் பார்த்தால், இராமாயணம் இருக்கிறது; மகாபாரதம் இருக்கிறது; பகவத் கீதை இருக்கிறது—ஆனால், கணக்கு நோட்டுகள் மட்டும் இல்லை!"

> பக்தி-செலுத்தி, பரமனை நாடாதாரெல்லாம், பாவிகள் என்கின்றது ஆச்சாரியார் குழாம். இந்த நிகழ்ச்சிகளுக்கு, என்ன சொல்வரோ ......?

"உண்மையாகவா..."

"ஆமாம், நண்பா! மே, 13ந் தேதி வந்த செய்தி இது. அதற்குமேல் அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதற்காக அனுதினமும் தினசரியை உற்று நோக்கி வருகிறேன். விபரம் எதுவுமில்லை"

"சரியான எத்தனாக இருக்கிறானே பகத்"

"நீ எத்தன் என்கிறாய்; அவன் ஊரில், எத்தனைபேர் அவனைப் பக்தன் என்று அழைக்கிறார்களோ, யாருக்குத் தெரியும்?"

* * *

"ஓம், ரீம்!—என்று அவர் உச்சாடனம் செய்ய ஆரம்பித்துவிட்டால், தன்னையே மறந்துவிடுவார். அவ்வளவு பெரிய சாது அவர்."

"எந்த ஊர்?"

"பீகாரிலுள்ள, அரா என்பது அவர் ஊர்! காளிதேவி மீது அவருக்கு அபாரபக்தி."

"அதனால்...?"

"ஜெய்ப்பூர் என்கிற கிராமம் வழியாக, அந்தச் சாது போய்க்கொண்டிருந்தார். அங்கே, ஒரு சிறுமி! வயது எட்டு இருக்கும்; மொட்டுப் பருவம்..."

"அந்தச் சிறுமியை என்ன செய்தார்?"

"கழுத்தைப் பிடித்தார்! திருகினார்! கையிலிருந்த அரிவாளால் வெட்டினார்..."

"பயங்கரமாயிருக்கிறதே! அந்தச் சாது இப்படிச் செய்யும்படியாக அந்தச் சிறுமி குற்றமென்ன செய்தாள்?"

"ஊரைச் சொத்தைக் கொள்ளையடிக்கவில்லை-ஒருவருக்கும் வஞ்சனை செய்தறியாத வயது—உல்லாசத்தில் புரளும் செல்வவானின் செங்கரும்பும் அல்ல; ஏழை! அங்கு, ஆடுமேய்த்துக் கொண்டிருந்திருக்கிறாள்..."

"அவளை, இந்தச் சாது ஏன் இப்படிச் செய்தார்?"

"பக்தியால்!"

"பக்தியாலா?"

"ஆமாம்! அந்தச் சிறுமியின்உடம்பிலிருந்து வழிந்த இரத்தத்தைக் கொண்டுபோய் காளிக்கு அர்ப்பணம் செய்தானாம் சாது..."

"அடப்பாவி!"

"அப்படி நீ சொல்கிறாய். ஆனால் அவன், இதை எவ்வளவு பெரிய பதிதமான காரியம் என்று நினைத்துக் கொண்டிருப்பான்..."

"நாசகாலன்! எப்படி ஒரு குழந்தையைக் கொலைசெய்ய அவனுக்கு மனம் வந்தது...?"

"பதறாதே! இந்தக் காரியம்தானே, சிறுத்தொண்டர் செய்தது...?!"

"அந்தச் சாது பிறகு என்னவானான்?"

"போலீசார் கையில் அகப்பட்டான்—கூண்டிலேற்றப்பட்டு, தீவாந்திர சிட்சை விதிக்கப்பட்டிருக்கிறான், 22ந் தேதி..."

"பயங்கரமாயிருக்கிறதே, பக்தனின் செயல்! ஆண்டவன் இதையா கேட்கிறார்...?"

"சொல்லாதே! ஆச்சாரியார், குழாம் சீற ஆரம்பிக்கும்..."

* * *

"அழகான பெண்! பருவப் பெண் ஐயா, பருவப் பெண்! பாருங்கள் இப்படி. ஒருதரம், எட்டணு..."

"இதென்ன நண்பா, எங்கே பருவப் பெண்ணை ஏலம் போடடார்கள்?"

"திருப்பதியில்!"

"என்ன?"

"ஏன், அப்படி ஆச்சரியத்துடன் கேட்கிருய்! பருவம் அடைந்த பெண்களை வெளியில்கூட அழைத்துச் செல்ல விரும்பாத நாட்டிலா, இப்படியொரு காரியம் என்றுதானே? உண்மையில் நடந்ததாம், திருப்பதியில்! எட்டணுவில் தொடங்கி, அப்பெண்ணை உறவினர் ஒருவரே ரூபாய் மூன்றுக்கு ஏலம் எடுத்தாராம்..."

"ஏன், ஏலம் போட்டார்களாம்?"

"இப்பெண்ணை, ஆடு மாடு கோழி போல பகவானுக்கென்று தத்தம் கொடுத்திருந்தார்களாம். அதனல், ஏலம் போட்டு, அந்தப் பணத்தை திருப்பதியானின் உண்டியலில் போட்டுவிட்டு, அவளை அழைத்துக் கொண்டு போனர்களாம்."

"சிரிப்பாயிருக்கிறது, நீ தெரிவிக்கும் சேதி."

"சிரிக்காதே — சீறுவார் ஆச்சாரியார்..."

* *

"இராமசாமித் தேவர், ஒரு மிட்டாய்க் கடை வியாபாரி!"

"எந்த ஊர்?"

"திருநெல்வேலி...!"

"இருவரும், ராஜ்கோட் சேட்டைப் போல, ஏதாவது 'டிமிக்கி' கொடுத்தாரா...?"

"நம்ப ஊர் மிட்டாய்க் கடைக்காரர்களுக்கு வரி கொடுக்கிற அளவுக்கு ஏதப்பா வருமானம்?...... அவருக்கு ஒரு குழந்தை."

"அதையும், எவனவது ஒரு சாது கொண்டுபோய்க் கொலை செய்து விட்டாஞ?"

"சாது எவனும் இந்தச் சண்டாளத்தனம் செய்யவில்லையப்பா! அவரே, ஆசையுடன் விளாத்தி குளம் அருகிலுள்ள, புதுக் கிராமம் கோவிலுக்கு அனுப்பினர்..."

"ஏன்?"

"மாவிளக்குப் போட்டுவர!"

"ஊம்..."

"அம்மனுக்கு, மாவிளக்குப் போட்டார்கள்— மனம் வைச்சு எங்களைக் காப்பாத்தடி தாயே' என்று வேண்டினர்கள். படைத்த பிறகு, மாவிளக்கை எடுத்து, குழந்தைக்கு ஆசையோடு கொடுத்தார்கள் குழந்தையும் தின்றது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் செத்தது..."

"ஏன்?"

"மாவிளக்கு மாவில் ஏதோ நச்சுப் பொருள் இருந்ததால், அது செத்ததாம்!"

"அம்மன்...?"

"இதுபோன்ற ஆபத்துக்கள் ஏதாவது தங்களுக்கேற்பட்டுவிடுமென்று தானே நம்முடைய மாரிமகமாயிகள், பக்தர்களின் படையல்களைத் தொட்டு கூடப் பார்ப்பதில்லை..."

* * *

"எத்தனை நாளைக்குத்தான், ஏழுமலையேறுவது எல்லாவாற்றையும் உண்டியலில் போட்டு வருவது? அதனல் குறுக்கு வழி ஒன்று கண்டு பிடித்துவிட்டார்களாம் பக்தர்கள்!"

"எதற்கு, குறுக்கு வழி?"

"சாமி, என் கலியாணத்தை முடித்துவை. சாமி, என்னைப் பணக்காரனுக்கு. சாமி, என்னைச் சினிமாவில் சேர்த்துவிடு—இப்படி எத்தனைபேர், ஆண்டவனை வேண்டுகிருர்கள்..."

"அப்படி வேண்டுகிறவர்களுக்கெல்லாம், காரியம் சித்தியடைவதாயிருந்தால், காமராஜ் முதலமைச்சராகவாயிருப்பார்? அவர் வரக்கூடாதென்று ஆயிரமாயிரம் தடவை ஆச்சாரியார், வேண்டாமலாயிருந்திருப்பார்?'...'

"நீ, எங்கேயோ போகிருயே! நான் சொல்வதைக் கேள்......அப்படியெல்லாம் வேண்டிக்கொண்டு, பக்தர்கள், 'கார்டு' போடுகிருர்களாம் கார்டு!"

"யாருக்கு?"

"ஆண்டவனுக்குத்தான்!"

"ஆண்டவனுக்கே, கார்டு போட ஆரம்பித்துவிட்டார்களா?"

"ஆமாம்! ஒவ்வொருநாளும் திருப்பதி ஏழுமலையானுக்கு, இப்படி ஏராளமான கார்டுகள் வருகிறதாம்......"

"சுலபமான வேலை! ஆமாம், கார்டு கண்டதும், திருப்பதி வேங்கடேசன் பதில் போடுகிருராமா?"

"அதுதான் தெரியவில்லை!"

"மடாதிபதிகள் பக்தியையா வளர்க்கிருர்கள்? வேஷம் போட்டுத் திரிகிருர்கள்!" — ஓமந்தூரார், மே 14-ல், விழுப்புரம் அருகேயுள்ள ஒரு பள்ளியில்.

# சிரிக்காதீர்கள்!

—::—

"தட்சிணப் பிரதேச யோசனைக்கு, மக்களிடம் செல்வாக்கு இல்லையென்று கூறுவோரே! தெரியுமா சேதி? நீங்கள் பிப்ரவரி 20 நடத்திக் காட்டலாம் அதனல் என்ன! எமது யோசனைக்குள்ள செல்வாக்கின் அளவினை அறிய வேண்டுமா? வருக, எம்முடன்! வந்து பாருங்கள்!" என்று அறிவிப்பதுபோல, ஏடுகள் யாவும், ஒரு செய்தியைப் போட்டிருக்கின்றன.

தட்சிணப் பிரதேச யோசனைக்கு இப்போது மவுசு இருக்கிறதாம்!

இப்போது!

இத்தனை நாளும் இல்லாமல், இபபோது ஏற்பட்ட இந்த மவுசை, இவர்கள் எப்படிக் கண்டுகொண்டுள்ளார்கள் தெரியுமா? அந்த இடம்தான, ஆச்சரியத்துக்குரியது!

இரயிலில் பிச்சைக்காரர்கள் பாடுகிருர்களாம்!

தட்சிணப் பிரதேச பாட்டுக்களைப் பாடுகிருர்களாம்!

அதனல், ஏட்டாளர், அறிவிக்கிருர்—தட்சிணப் பிரதேசத்துக்கு நாட்டில் செல்வாக்கு வளர்கிறதென்று.

ஆசை, வெட்கம் அறியாது என்பார்கள் —ஆச்சாரியாருக்கு வலிவு தேடுவதில், இந்த ஏடுகளுக்குள்ள ஆர்வத்தைப் பாருங்கள்— உண்மையோ! பொய்யோ! பிச்சைக்காரர்கள் பாட்டுப்பாடுவதைக்கண்டறிந்து ஏதோ எல்லாத் திக்குகளுக்கும் நிருபர்களை அனுப்பி, நிலைமையைக் கண்டறிந்ததுபோல, உங்களுக்கும் நமக்கும் அறிவிக்கப் படுகிறது, சிரிக்காதீர்கள்! இவைதான், நமது நாட்டின் ஏடுகள்!

# விசித்திரமல்ல, ஐயா!

"திட்டமென்ன? என்று கேட்கிறாராம், காமராஜர். திராவிட முன்னேற்றக் கழகத்தார், தேர்தலில் எந்தத் திட்டத்தை வைத்துக் கொண்டு இறங்கப்போகிறார்கள் என்று கேட்கிறாராம். அவருக்குச் சொல்கிறோம். எந்த ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டி, காங்கிரசார், மக்களிடம் செல்லப்போகிறார்களோ அதே ஐந்தாண்டுத் திட்டத்தையே நாங்களும் மக்கள்முன் வைக்கிறோம். ஆறாயிரம் கோடி செலவழிக்கப்போவதாக, டில்லியார் சொல்லுகிறார்கள். அதில், நமக்குக் கிடைப்பது 175 கோடிதான்! இது நியாயமா? என்று கேட்போம், மக்களை. ஆலைகள் எல்லாம் வடக்கே! அணைக்கட்டுகள் யாவும் வடக்கே! ஆனால், இங்கே பாலைவனமாகத்தான் வழி செய்யப்படுகிறதே ஒழிய, வாழ வழியில்லை என்பதை எடுத்துச் சொல்வோம்' என்று இராமநாதபுரம் மாவட்டத்திலே, இரு கிழமைகளுக்கு முன்பு நடைபெற்ற பொதுக் கூட்டத்திலே பேசியபோது சி.என்.ஏ. குறிப்பிட்டதோடு, "இப்போதுகூட ஒரு நிபந்தனை. வேண்டுமானால் நாங்கள் தேர்தலில் நிற்காமலிருக்கிறோம். தேர்தல் மட்டுமல்ல எமது இலட்சியம். நாட்டுக்கு நன்மைகள் மலர்ந்தால் போதும். காமராஜர், டில்லியிடம் கேட்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டாயிரம் கோடி ஒதுக்குமாறு செய்யட்டும். ஒதுங்கிக்கொள்கிறோம்" என்று கூறிய கூற்றினைச் செய்தியாகப் போடவந்த தினமணி, விசித்திரம் என்கிறது. ஆசிரியர் குறிப்பெழுதியல்ல, செய்திகளைப் போடும் துணையாசிரியரே தலைப்பிட்டுத் தெரிவிக்கிறார், விசித்திரம் என்று!

இரண்டாயிரம் கோடி கேட்பது விசித்திரமாகத் தென்படுகிறது. ஆனால், நாடு, பாலைவனமாகிக் கொண்டே இருப்பது விசித்திரமாகத் தென்படவில்லை, அவர் போன்றாருக்கு!

தென்னாடு, வடநாட்டைவிடச் சலுகை பெற்றுள்ளதா?—சவால், விட்டுக் கேட்கிறோம்! இந்த ஏழெட்டாண்டுகளில், எந்தத் துறையிலாவது அதிகச் சலுகை பெற்றதுண்டா!

140 கோடியில் தாமோதர்,
120 கோடியில் பக்ரா, நங்கல்
68 கோடியில் ஹீராகுட்
50 கோடியில் மச்சகந்து

இவை அத்தனையும், வடக்கேதானே ஒழிய தெற்கே அல்ல! தெற்குக்குப் போடப்பட்ட அணைக்கட்டுகள் எல்லாம்.

18 கோடியில் துங்கபத்திரா
4 கோடியில் கீழ்பவானி
3 கோடியில் மணிமுத்தாறு
1 கோடியில் மாலம்புழா

இதுதானே தவிர, ஏதாவது ஒரு அணைக்கட்டு; வடக்கில் திட்டமிட்டளவுக்கு இங்கே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதுண்டா? 'விசித்திரம்' என்னும் வீரர், விளக்கவேண்டும்!

அணைக்கட்டுத் திட்டங்களில்மட்டுமல்ல, ஐந்தாண்டுத் திட்டத்தால் நாட்டையே தொழில்மயமாக்கப் போகிறோம் என்று சண்டப்பிரசண்டம் செய்கிறார்களே, தெற்கில் எந்தத் தொழிற்சாலை கட்ட எத்தனை கோடி ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள் இதுவரை? இரும்பாலை அமைக்க இயலாது என்றார்கள் சேலத்தில். இதோ, இந்தக் கிழமை சேதி வருகிறது,

600 இன்சினீயர்கள்

வந்து இறங்கியிருக்கிறார்களாம் அமெரிக்காவிலிருந்து.

## 75 கோடி ரூபாய்

பணமும் வந்துள்ளதாம், அமெரிக்கக் கம்பெனியிலிருந்து.

எதற்கு? ஜாம்ஷெட்பூரில் வானையளாவுமளவுக்கு வளர்ந்து கிடக்கிறதே, பணத் திமிங்கிலம் டாடாவின் எஃகு ஆலை, அதற்கு! 600 இன்சினீயர்கள், 75 கோடி பணம்!

இதைக் காணுகிறபோது, என்னவென்று கூறமுடியும்? வாழ்கிறது, வடக்கு! வளர்கிறது வடக்கு!!—அதனைச் சுட்டிக் காட்டுவது, விசித்திரமாம், அன்பருக்கு.

வடக்கு அநீதி இழைக்கிறது என்பதனை திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம்மட்டும் கூறுகிறோம் என்றில்லை.

ஓமந்தூரார்
குமாரசாமி ராஜா
ஆச்சாரியார்
கோபால ரெட்டி

அத்தனை பேரும், ஆட்சிப்பீடத்திலே அமர்ந்திருந்தபோது, சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல,

தமிழ்நாடு காங்கிரசே

கடந்த ஆண்டு குற்றாலத்தில் கூடியபோது, குறைபட்டுக்கொண்டது.

சென்னை சட்டசபைகூட

வடக்கு நமக்குப் போதிய நியாயம் வழங்கவில்லை என்று ஒன்று கூடி தீர்மானம் நிறைவேற்றிற்று.

காமராசரும்

'கனம்'களும்

மறுக்கவில்லை. தினமணியாரும், மித்திரனும், இத்துவும் பிறவும், ஆமாம் போடத் தவறவில்லை.

இருந்தும், இப்போது, விசித்திரம் என்கிறார்கள்—வாடும் நாடு, தனது பங்காக இரண்டாயிரம் கோடி தர வேண்டுமெனக் கேட்டால் என்ன!

ஆறாயிரம் கோடியாமே, அகில இந்தியாவுக்கும்! அதிலே, தெற்குக்கு இரண்டாயிரம் கோடி ஒதுக்கினால் என்ன!

வடக்கு, நமக்கு இழைக்கும் அக்கிரமத்தை இங்குள்ள காங்கிரஸ்காரர்

களும், 'கனம்'களும், மைசூர் அனுமந்தையாவும், தெலுங்கு நாட்டு கோபாலரும், திருவாங்கூர் கோவிந்த மேனனும்தான், எடுத்துச் சொன்னர்கள்-அவைகளைக் கேட்ட, டில்லியார், 'அதெல்லாமில்லை' என்று மறுத்தார்கள் என்று எண்ணுதீர்கள்.

டில்லி மந்திரி தேஷ்முக்கே, தெரிவிக்கிருர்,

"பின்னடைந்த பகுதி என்கிற வகையில் கவனித்தால், சென்னை, அதன்கீழ்வரும்"

"சென்னையில் பெரிய திட்டங்கள் பல இருக்கவில்லை."

"கடைசியாகவுள்ள பெரிய நீர் நிலைய மின்சார திட்டம் குண்டாவேயாகும். இதில் **நான் சிறிது** அக்கரைகாட்டி வருகிறேன்"

"பழுப்பு நிலக்கரி திட்டத்துக்கு நிதி தேடும் பொறுப்பும் இருக்கிறது. இவைகளைத் தவிர, சென்னை எடுத்து நடத்தக்கூடிய **பெரிய திட்டம் ஏதும் இல்லை."**

தி. மு. கழகத்தாரின், வாய்க்குப் பூட்டு போடலாமென்ற கருத்துடனே என்னவோ துணைவியாருடன் சிங்காரச் சென்னையில் எடுத்தடிவைத்த தேஷ்முக்கை, 'விசித்திரம்' என்றுரே மணியார் அவருடைய நிருபரும் ஏனைய பத்திரிகைப் பிரதிநிதிகளும் பேட்டி கண்டு பேசினராம். அப்போது, இத் தகவல்களை, அளித்துள்ளார், டில்லி நிதி அமைச்சர்.

மீண்டும் ஒரு முறை, அவருடைய பதில்களைக் கவனிக்கவேண்டுகிருேம்.

**சென்னை,**

**பின்னடைந்த,**

**பகுதிதான்!**

மறுக்கவில்லை, அவர். பின்னடைந்த பகுதி, முன்னேற்றமடையத்தானே, ஐந்தாண்டுத் திட்டம்? முன்னேறச் செய்ய வேண்டுமென்றுல், திட்டங்கள் பல இருக்க வேண்டுமே! உளதா, என்றுல், தெளிவாகவே தெரிவிக்கிருர்,

பெரிய திட்டங்கள்

**பல இருக்கவில்லை!**

"பல", இல்லையென்றுல் சிலவாவது; இறக்கிறதென்று அவர் ஒப்புக்கொள்கிருரா என்றுல்,

குண்டா மின்சார திட்டம்

பழுப்பு நிலக்கரி திட்டம்

இவைகளைத் தவிர,

**பெரிய திட்டம்,**

**ஏதுமில்லை!!**

அவரே, தெரிவிக்கிருர் — இதனை ஒப்புக்கொள்ளுவதில், அவருடைய நேர்மையுள்ளமல்ல நமக்குத் தென்படுவது! நெஞ்சழுத்தத்தையே, காண்கிருேம்!!

குறைகள் கூறப்படுமாயின் "இல்லை, இல்லை" என்று மறுப்பது எத்தன் செயல்.

"கவனிக்கிருேம், அவசியம் கவனிக்கத்தான் வேண்டும்" என்பது நல்லவனைப்போல நடிப்பவன் செய்கை.

'ஆமாம்' என்று ஒத்துக்கொண்டு மென்மேலும் அதே முறையில் நடப்போம் என்று அறிவிப்பது, திமிர் கொண்டோரின் செயல்.

டில்லியின் நடவடிக்கையில், இத் திமிரையே கண்டுவருகிருேம், நாம்.

நீதி வழங்கும்எண்ணம் ஒரு சிறிதுமில்லை, அவர்தம் உள்ளத்தில்.

பஞ்சாப் பிரச்னை, வங்கத்தொல்லை, உத்திரப் பிரதேச விவகாரம், பம்பாய் சங்கடம், பீகார் தகராறு புரிகிற அளவுக்கு நமது குரல் அவர்களுக்குப் புரிவதுமில்லை; புரிந்தாலும் கவலைப்படுவதுமில்லை.

இதனைத் தெளிவாக உணர்கிற காரணத்தாலேயே, நாம் தனிநாடு கேட்கிருேம்.

காரணங்கள் ஓராயிரம் காட்டிய வண்ணம் கேட்கிருேம்.

புள்ளி விவரங்களைக் காட்டி, நாம் தனிநாடு கேட்கிருேம்.

இதனை, விசித்திரம் என்றும் பித்துக்குளித்தனம் என்றும், பேதமை என்றும், வார்த்தைகளைக் குண்டுகளாக்கி வீசுவதன் மூலம் அடக்கிடலாமென்று எண்ணுகின்றனர், ஆதிக்க புரியினரின் அடிவருடிகள்! அதனுல் தான், "இரண்டாயிரம் கோடி தரட்டுமே!', என்று நாம், ஒரு சொல் உதிர்த்ததும், கேலியும் கிண்டலும் கிளம்புகிறது மணியிடமிருந்து!

"இரண்டாயிரம் தானே? எங்கள் நேரு சர்க்கார் என்ன, நேர்மையற்றதா? சொன்னுல் கேட்காதா! கேட்டு வாங்கி வருகிருேம்," என்று கூற, துணிவேது, இவைகளுக்கு?

போய்ப் பல்லைக் காட்டி கெஞ்சியும் தான் 170 கோடியை 250 கோடியாகக் கூட ஆக்க முடியவில்லையே, அமைச்சர்களாம் சுப்பிரமணியத்தாலும், பக்த வத்சலத்தாலும்! இந்த விசித்திரத்தில், நாம் கோருவதை விசித்திரம் என்கிறது இந்த ஏடு! வேதனைக்கு வித்திடும் ஏடு! ★

"பார்லிமெண்டில் இந்தி ஆதரிப்பாளர்கள் மற்றவர்களுக்கு நிறைய சங்கடத்தை ஏற்படுத்துகிருர்கள்.

அதுமட்டுமல்ல, இந்திக்காரர்களிடம் பாராட்டுப் பெறுவதற்காகத் தென்னுட்டில் இருந்து சென்ற சில துணை அமைச்சர்களும்கூட (அளகேசன், கிருட்ணப்பா போன்ருேர்) சில சமயங்களில் அரைகுறை இந்தியில் பேச ஆரம்பித்து விடுகின்றனர்.

எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரிதும் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், வங்காளம் ஆகிய மாநிலங்களில் இருந்து சென்றவர்கள். அவர்களில் பலருக்கு இந்தி தெரிவது இல்லை. அமைச்சர்கள்கூட சில சமயங்களில் இந்தியில் பேசத் தொடங்கிவிடுவதால் முக்கியமான சபை நடவடிக்கைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தெரியமுடியாதுபோகிறது."

இவ்விதம் சொல்வது யார் தெரியுமா? ஏ. கே. கோபாலன்! ஏக இந்தியா கோரும் கம்யூனிஸ்டுக் கட்சிக் கோபாலன் தான், இவ்வாறு கோவையில் ஒரு பேட்டியில் கூறியிருக்கிருர்!

நீங்கள் படித்துவிட்டீர்களா?

புத்தம் புதிய நூல்

சி. என். ஏ. தீட்டிய

# நாட்டின் நாயகர்கள்

விலை அணு எட்டு

வியாபாரிகளுக்கு 25o/o கழிவு. தனிப்பிரதி வேண்டுவோர் போதிய தபால் தலைகள் அனுப்புக.

பரிமளம் பதிப்பகம்,
காஞ்சீபுரம்.

# அவர் படப்பிடிப்பு!

**மகானைத் தரிசிக்க வந்திருக்கிறோம்!**

**மகரிஷியின் ஆசீர்வாதம்பெற வந்திருக்கிறோம்.**

**உத்தமரின் உபதேசம் கேட்டிட வந்திருக்கிறோம்,**

**அண்ணலுக்கு அஞ்சலி செலுத்த வந்திருக்கிறோம்.**

காங்கிரஸ் தலைவர்கள்—அதிலும் கனதனவான்கள், இதுபோலக் கனிவுடன் பேசுகிறார்கள், கழலடி தொழுகிறார்கள், கண்மூடிப் பிரார்த்தனை செய்கிறார்கள்-தானம்குறித்துப் புகழுரை வழங்குகிறார்கள் — பாத யாத்திரையும் செய்கிறார்கள்.

அதிலும், தத்தமது 'தொகுதி'யில் அவர் 'யாத்திரை' வரும்போது, பிரத்யேக அக்கரை காட்டுகிறார்கள் — அவர் அதனைத் தொல்லை என்று கருதினால், என்ன செய்வது என்றுகூட எண்ணிக்கொள்வதில்லை—தமது தொகுதி எல்லை வரையில் அவருடன் சென்று 'தொண்டு' செய்து காட்டுகின்றனர்.

ஒழலூர் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ளதோர் சிற்றூர்.

சில ஆண்டுகட்கு முன்பு அங்கு நிலப்பிரபுவுக்கும், உழவர்கட்கும் பகை மூண்டது.

அரிவாளும் தீப்பந்தமும், அடியாட்களும் அதிகார வர்க்கமும்—படைக் கருவிகளாயின!

வயல்கள், களமாயின!

ஒழலூரில் அமைதி நிலவ நீண்ட காலம் பிடித்தது.

அழகேசன்—ஒழலூரார்!—டில்லியில் குட்டி அமைச்சர் — ரயில்வே துறைக்கு.

வினோபாவின் பாதயாத்திரையின்போது, ஒழலூர் அழகேசன் அவர்கள் உடனிருந்திருக்கிறார்—திருவாய் மொழிகூடப் படித்துக் காட்டினாராம் அடிகளாருக்கு!

அமைச்சரின் அன்பு கண்டு, பலரும் பாராட்டுரை வழங்காதிருக்க முடியுமோ.

மகான் ஒருவருடன், பயபக்திவிசுவாசத்துடன், யாத்திரை செய்வது அதிலும் தமது தொகுதியில் யாத்திரை செய்வது ஒழலூராருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை நிச்சயமாகத் தந்திருக்கும். டில்லிப் பட்டணத்திலே மந்திரி வேலை பார்த்தபோதிலும், வினோபா, தமது வட்டாரத்திலே இருப்பதறிந்ததும், ஓடோடி வந்து 'நமஸ்காரம்' செய்து, 'ஆசீர்வாதம்' பெற்றுக்கொண்டதுடன், யாத்திரையிலும் கலந்துகொண்டது கண்டு, தொகுதி மக்கள், தங்கள் பிரதிநிதியின்பால் மிகுந்த மதிப்புகொள்ளத்தான் செய்வர்.

ஆனால், ஒருகணம்தான்!

மறுகணமோ அவர்கள் "ஐயன் என்றும் மெய்யன் என்றும் அடிகளாரை அர்ச்சிக்கும் அமைச்சர், தமது பூமியில் எவ்வளவினைத் 'தானம்' செய்தார், என்று கேட்பர் — கணக்கு கூறப்பட்டதும், கைகொட்டிச் சிரிப்பர்.

மக்களின் மனம் அறியாதவரல்ல அமைச்சர் — எனினும் கிடைத்தவரையில் இலாபம்தான் —மக்களின் பார்வையில் படுவதிலே எத்துணையோ இலாபம் இருக்கத்தான் செய்கிறது, என்பதையும் அறிந்திருக்கிறார்.

எனவே, நீண்டகாலமாகத் தவம் கிடந்தவர் போலாகி, அடிகளுடன் ஆத்மீக விசாரணையில் ஈடுபட்டார்.

அமைச்சர் பரமேஸ்வரன், ஒழலூராருக்குத் துணை நிற்பது போலானார்.

அவரும் அடிகளாருடன் யாத்திரையில் கலந்து சென்றார்.

இதுபோன்றே, பெரும் காங்கிரஸ் தலைவர்கள் பதவியில் தமக்கெல்லாம் உண்மையான பாசம் கிடையாது என்று கூறுவது போலவும், தாமரை இலையில் தண்ணீர் போலத் தங்கள் பதவியில் இருப்பது போலவும் தோன்றும்படி நடந்துகொள்கிறார்கள்.

மக்கள் இதுகண்டு ஏமாறுகிறார்களா, ஏளனம் செய்கின்றனரா என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

ஒன்று தெளிவாகத் தெரிகிறது இவர்தம் போக்குகண்டு, வினோபா ஏமாறவில்லை.

அமைச்சர்கள் தம்மைப் பின்தொடருவது கண்ட அடிகள், தம்முடன் இருக்கும் சமயத்திலேதான், அவர்கள் நடாத்தும் துரைத்தனம் குறித்து தமக்கு ஏற்பட்டுள்ள எண்ணத்தை வெளியிட்டுவிடவேண்டும் என்று தீர்மானித்துப் பேசியிருக்கிறார்.

மிகச் சிறந்த உளப்பண்பும், அஞ்சாமையும் உடையோர் மட்டுமே, இதுபோல் நடந்துகொள்ள முடியும்.

வினோபா, "விழிப்பாகத்தான் இருக்கிறேன் — வீணர்யார் என்பது புரிந்துதான் இருக்கிறது" என்று எடுத்துக் கூறுவது போலவே பேசியிருக்கிறார்.

அமைச்சர்களின் அஞ்சலி கண்டு அவர், மனதைப் பறிகொடுத்துவிடவில்லை — புகழுரை வீசுவோர் அனைவருமே தூய்மையாளர் என்று தவறான கருத்தும் கொண்டாரில்லை.

காங்கிரஸ் ஆட்சியாளர் 'குணதிசயம்' குறித்து அவர் பாராட்டவுமில்லை, கண்டிக்கவுமில்லை.

அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை!! ஆட்சியாளர்களின் முறை பற்றியும் அவர் ஏதும் கூறினாரில்லை — கூறத்தக்க சிறப்பியல்பு எதுவும் இல்லை என்பதைச் சொல்லாமற் சொல்லிவிட்டார்.

காங்கிரஸ் ஆட்சியில்; ஏழை வாழவும் அறம் தழைக்கவும், வழி இருக்கிறது—என்று அவர் நம்புவாரானால், ஏழை பங்காளர் என்ற

**'விருது'** அளித்து, காங்கிரஸ் கட்சியை ஆதரித்தும் இருப்பார்.

அவர், அதுபோல ஏதும் பேசாததே, அவருக்கு, இன்றைய ஆட்சியாளரிடம் நம்பிக்கை இல்லை என்பதை அவனிக்கு எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் அமையாமல், அமைச்சர்கள் புடை சூழ வருகிற காரணத்தால், இத்தகைய பக்தர்களின் பரிபாலனத்திலே, ஏழைகளுக்கு இதம் கிடைத்திட வழி எளிதில் கிடைத்துவிடும் என்று எண்ணிக்கொள்ளாதீர்கள்—ஏழையை ஈடேற்றும் காரியத்தை, நிலத்தை அனைவருக்கும் பங்கிடும் புனிதச் செய்கையை, என்னிடம் இன்முகம் காட்டி, கரும்பு மொழி பேசிடும் 'கனம்'கள் செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை! எனவேதான், அந்தக் காரியமாற்ற நானே கிளம்பியிருக்கிறேன் என்றே கூறுகிறார்—இலை மறை காயாக!

வெளிப்படையாகப் பேசினால் மட்டுமே கள்ளங்கபடமற்ற உழவர்கள் புரிந்துகொள்ள முடியும் என்பதையும் உணர்ந்து, விளக்கமாகவே வினோபா பேசிவிட்டார்!

பட்டபாடு கெட்டுவிட்டது என்றெண்ணிப் பதைத்தனரோ, ஏதோ தெரியவில்லை நான் ஏமாறவுமில்லை, மக்களையும் நான் ஏமாறவிடப் போவதில்லை என்ற நோக்குடன் பேசுவது போல அமைந்துவிட்டது, சிறுநல்லாறு எனும் சிற்றூரில் அவர் பேச்சு.

மூன்று கருத்துகளை வினோபா ஐயத்துக்கு இடமின்றி விளக்கிவிட்டார்.

(1) சட்டம் தக்க பலனளிக்கவில்லை.

(2) நிலப் பிரபுக்களே பெருவாரியானவர்கள், இன்றைய ஆட்சியில் — எனவே, நில சீர்திருத்த சட்டம் அவர்கள்மூலம் பிறப்பது இயலாததொன்றாகும்.

(3) நஷ்டஈடு தரும் திட்டம் இருக்கிறது—எனவே வழக்குத் தொல்லைக்கு வழி ஏற்படும்.

'பாபா' ஏன், பூதானம் கேட்டு 'யாத்திரை' செய்யவேண்டும்; அவரிடம் பக்தி காட்டுவோர்தானே ஆட்சியில் இருக்கிறார்கள்—அவர்களிடம் எடுத்துரைத்துச் சட்டம் இயற்றச் சொல்லலாமே என்று சில பலர் கேட்கின்றனர்; அதற்குப் பதிலளிக்கப் பேசுகிறார் என்றாலும், அவர் தனது பெருந்தன்மையையும், சட்டத்தின் தன்மையில் அவருக்கு உள்ள கருத்தையும்மட்டும், எடுத்துக் காட்டுவதாக அந்தப் பேச்சு இல்லை.

பொருளைப்பற்றி எண்ணிப் பார்க்கப் பார்க்க, கருத்தாழ்ம் சுவை தரும் விதமாக இருந்திடக் காண்கிறோம்.

சட்டம் இயற்றலாம் — இயற்றுகிறார்கள்—ஆனால் சட்டம் ஏட்டளவில் இருந்துவிடுகிறதே, என்ன செய்வது என்று கேட்கிறார், வினோபா!

'பால்ய விவாகம்'கூடாது என்று சட்டம் இருக்கிறது—ஆனால் நாட்டில் இப்போதும் குழந்தை மணம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தீண்டாமை சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டுத்தான் இருக்கிறது எனினும், கிளர்ச்சி செய்தும், காசி விசுவநாதர் கோயிலில் அரிஜனங்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை; என்று இரு எடுத்துக் காட்டுகளைச் சுட்டிக் காட்டுகிறார், வினோபா!

ஏளனம் செய்கிறாரா, இடித்துரைக்கிறார் என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

சட்டம் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது—எந்த வகையில் உயிரோட்டத்தோடு இருக்கிறது என்பது வினோபா பேச்சினமூலம் விளக்கமாகிறது.

பொதுமக்களுடைய ஒப்பம் இல்லாதபோது, சட்டம் இதுபோலத்தான், பலனற்றுப் போகும் என்று வினோபா கூறுகிறார்.

மறுப்பார் இல்லை. இதுமட்டுமல்ல, சட்டம் செத்துக் கிடப்பதற்குக் காரணம்.

மக்களின் ஒப்பம் கிடைத்திடும் வகையில் பொறுப்பான பணியாற்ற சர்க்கார் தவறிவிட்டது என்பதும்,

சட்டம் ஏட்டளவில் இருந்தால் போதும், நடைமுறையில் எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்ற அசட்டைப் போக்கும்,

ஏட்டில் உள்ள சட்டத்தை உடைத்திட ஆயிரத்தெட்டு குறுக்குவழிகள் தேடிடுவோரின் கொட்டத்தை அடக்கிடும் சக்தி அற்றுப்போனதும் கூடத்தான், சட்டம் செத்துக் கிடப்பதற்குக் காரணம்.

சட்டம் இயற்ற 'மேதைகள்' இருந்தால்மட்டும் போதாது, அது நடைமுறை வெற்றிபெற, நாணயவான்கள், நேர்மையாளர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கவேண்டும்.

இந்த 'இலட்சணம்' எங்கெங்கு இருக்கிறதோ, அந்த நாடுகளிலெல்லாம், சட்டம் செத்துக் கிடக்கவில்லை!

மக்களுக்குப் பொறுப்புணர்ச்சி வேண்டும் என்பதை வலியுறுத்தும் வினோபா, ஆளவந்தார்களிடமும் அதை எங்ஙனம் எதிர்பாராமலிருப்பார்! அவர் இன்றைய ஆளவந்தார் யார் என்பதை நன்றாக அறிந்திருக்கிறார்—பக்தி பேசுகிறார்கள், பஜனை செய்கிறார்கள்— எனினும் வினோபா ஏமாற மறுக்கிறார்-ஆளவந்தார்கள் யார் என்பதை மக்களுக்குக் கூறுகிறார்.

இன்றைய துரைத்தனம் மிகப் பெருமளவுக்கு நிலப் பிரபுக்கள் கொண்டதாக இருக்கும்போது, தங்கள் சுகபோகத்தைத் தாங்களே அழித்துக்கொள்ள, அவர்களா நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவருவார்கள்? நாம் அவ்விதம் எதிர்பார்க்கக்கூடாது!! —என்று விளக்கமாகக் கூறுகிறார்.

**நிலப்பிரப்புக்கள், ஆட்சியாளர்கள்!!**

**அவர்கள் தங்கள் சுயநலத்தைக் கெடுத்துக்கொள்ள மாட்டார்கள்.**

**எனவே இவர்கள் ஆட்சியில் நிலச் சீர்திருத்த சட்டம் வரும் என்று எதிர்பார்க்காதீர்கள்.**

—என்று மக்களிடம் தெளிவாகவே கூறிவிடுகிறார்.

ஏழை பங்காளர்கள் — ஈடேற்ற வந்தவர்கள்—சமதர்மம் கொண்டு வரும் சிலர்கள்—என்று பலப்பல பேசப்படுகிறது!! அவை அத்தனையும் வினோபாவைச் சொக்கவைக்கவில்லை. இவர்களிடம் எதிர்பார்க்கலாமா, என்று கேட்கிறார். ஆவடியில் முளைத்து அமிர்தசரசில் பழுத்த, சமதர்மம், வினோபாவுக்குக் காட்டப்படாமலில்லை! அவர் அமிர்தசரஸ் தீர்மானம் கண்டு, மயங்கவுமில்லை, மக்களிடம் திட்டவட்டமாகக் கூறுகிறார், நிலப் பிரபுக்கள் ஆட்சி செய்கிறார்கள், இவர்களிடம் நில சீர்திருத்தம் எதிர்பார்க்காதீர்கள் என்று.

பொதுப்படையாகப் பேசுவதுடன் வினோபா திருப்தி அடையவில்லை. உள்ளத்தில் பொங்கி எழுகிறது கோபம்! எத்தனை சூது நடத்தப்படுகிறது இந்தச் சுயநலமிகளால் என்பதை எண்ணுகிறார் —மக்களிடம் இதனையும் கூறிவிட வேண்டும் என்று உள்ளம் உரைக்கிறது—உரைத்தேவிடுகிறார்.

சில வேளைகளிலே நில சீர் திருத்த சட்டம்கூட இயற்றுகிறார்கள்.

அதன் இலட்சணம் எவ்விதம் இருக்கிறது, பாருங்கள்.

சட்டம் வருகிறது, வரப்போகிறது, வந்துகொண்டே இருக்கிறது, என்று கூறிக்கொண்டே நீண்டகாலத்தைக் கடத்துகிறார்கள்—ஏன்? இதற்குள் நில உடைமைக்காரர்கள் தங்கள் நிலங்களை விற்றுப் பணமாக்கிக்கொள்ளவோ பங்கு போட்டுக்கொள்ளவோ, நேரம் கிடைக்கவேண்டுமே, அதற்காக! கடைசியில் சட்டம் இயற்றப்படும், ஒருவரும் அதனால் பாதிக்கப்படமாட்டார்கள்! சட்டம் வெறும் கேலிக்கூத்தாகிக்கிடக்கும்!!

வினோபா தரும் இந்த விளக்கம், நிலைமையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது.

இதோ சட்டம்—அதோ சட்டம் ஆறே மாதம் — அடுத்த முறை சட்டசபை கூடும்போது—என்று கூறுகிறார்களே, காங்கிரஸ் மந்திரிகள்—அது ஏன்?—எதற்குப்பயன்படுகிறது? யாருடைய நன்மைக்காக? என்பது, தெளிவுபெற்றோருக்குத் தெரியும், ஆனால்வினோபாவின் விளக்கம் பாமரரும் உண்மையை உணரச் செய்கிறது. நாட்டுக்கு அவர் ஆற்றிவரும் அரிய பல தொண்டுகளிலே இஃது மிகச் சிறந்ததொன்றாகும்.

வினோபாவும் காங்கிரஸ் ஆட்சியாளருக்கு உடந்தைதான் என்ற கூற்று எத்துணை பொய்யுரை என்பதை இந்த அவருடைய விளக்கம் நன்கு எடுத்துக் காட்டுகிறது

அஞ்சலி செய்தாலும் அடிதொழுதாலும், அவரை ஏமாற்றுவது முடியாத காரியம் என்பதை இனியேனும் காங்கிரஸ் தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சிறுநல்லூர் பேருரை நாட்டின் நிலைமையையும், நாடாள்வோரின் நிலைமையையும் நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டும் நல்லதோர் படப்பிடிப்பு. துறவிதானே, அவரைத் தோத்தரித்து மயக்கிவிடலாம் என்று எண்ணி, அவர் 'யாத்திரை'யில் பங்குபெற்று, பாமரரை ஏய்த்திடப் பார்ப்போர், பதைப்பர், பதறுவர்!

உள்ளூரச் சபிக்கின்றனரோ என்னவோ, யார் கண்டார்கள்!

★

# "காலனி" அமைத்துக்கொண்டு!

ஆனந்தமாக வாழ்கிறார்களாம்!

ஏனையோர், கையெடுத்துக் கும்பிட, சீரும் சிறப்பும் பெற்று வாழ்கிறார்களாம்!

தனியாக தமக்கோர் 'காலனி' ஒன்று அமைத்துக்கொண்டுள்ளார்களாம்.

பீகாரிலுள்ள, மான்பூம் எனும் மாவட்டத்தில் வங்க மொழி பேசுவோர் அதிகம். அவர்களுக்கு மத்தியில், அழகான குன்று ஒன்றுக்கு அருகில், வயலும் வரப்பெடுத்த வாய்க்காலும் நிரம்பிய அழகியதோர் சிற்றூரில் இங்கிருந்து சென்றோர், இவ்வளவு இன்பமாக இருக்கிறார்களாம். இன்று நேற்றல்ல; முன்னூறு ஆண்டுகளாக அங்கு இருக்கின்றனவாம், முப்பது குடும்பங்கள்!!

நெல்லை மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திலிருந்தும், செங்கற்பட்டு மாவட்டத்தின் சில பகுதிகளிலிருந்தும் சென்ற குடும்பங்களாம் அவை.

தமிழ் பேசுகிறார்கள்.

வங்காளிகளுக்கு மத்தியில் வசித்தாலும் நமது கலாச்சாரம் எதையும் இழக்கவில்லை.

ஆண்டாண்டு காலமாக தமது முன்னோரால் வகுக்கப்பட்ட முறைகள் எதையும் விட்டுவிடவில்லை.

இம்மட்டோ, என்பீர்! இவர்களை, எப்படிப் போற்றுகின்றனர் தெரியுமா, வங்காளிகள்? சிரக்கம்பம் செய்வர், கண்டால். மான்பூம் மாவட்ட முழுமையுமே இவர்களுக்குள்ள செல்வாக்குக்கு ஈடு இணை கிடையாது. பீகார் அரசாங்கத்திலும், இவர்களுக்கு உயர்தர உத்தியோகங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சமூகத்திலும் தனி மதிப்பு, அரசிலும் உயர்ந்த கவுரவம் வாழ்க்கை ஒரு வசந்தச்சோலையாகயிருக்கிறது அவர்களுக்கு என்கிற வர்ணனையைக் கேட்டபோது, மகிழ்ச்சி ஏற்பட்டது, நமக்கு.

தமிழனுக்கு, உலக முழுதும் தடியடியும் குண்டடியும் கொடுக்கப் பட்டாலும் ஓரிடத்தில் சுகமாக வாழ்கிறான்—'தாராவி'யும் 'அகமதாபாத்தும்' இருந்தாலும், தளிர்ப்பூஞ்சோலையில் உலவுவது போல, இதோ பீகாரில் அவன் வசிக்கிறான், என்று எண்ணினேன்.

கட்டுரையைத் தீட்டிய பி. எஸ். பத்மநாபன், என்பார் நமக்கு இந்த ஆனந்தத்தைத் தரவோ அல்லது நைந்து வாழும் தமிழன் ஓரிடத்தில் இன்பத்தோடிருப்பதை அறிவீர் என்று சொல்வதற்காகவோ அல்ல, இந்த வர்ணனைகளை அளித்தது.

**"ஏ, மக்காள் மொழியையும், கலாச்சாரத்தையும் காட்டி, பல்வேறு மொழிகளும் பண்பாடுகளையும் கொண்டோர் ஒன்று சேர்ந்து வாழ முடியுமாவெனக் கேட்கிறீர்களே பாருமின் இதோ, இவர்கள் வாழ்வதை?" என்று கேட்டிருக்கிறார். இதனை, நமக்கு எடுத்துரைக்கவே, 'இந்து' இதழாரும் இக்கருத்தோவியத்தை அளித்துள்ளார்!!**

**ஆனந்தமாக வாழ்கிறார்கள்.**

**அரசிலும், சமூகத்திலும் தனியொரு அந்தஸ்து.**

**தமிழ் பேசுவதால், தடியடி கிடைக்கவில்லை.**

**முப்பது குடும்பங்கள், முன்னூறு ஆண்டுகளாக வாழ்கிறார்கள், இப்படி.**

இதனைச் சொல்லி, 'இந்து' ஏட்டார் கட்டுரை தருகிறார் நமக்கு! கடந்த ஆண்டு ஏப்ரல் முதல்தேதி ஞாயிறு மலரில் வந்திருக்கிறது. கருத்துரையும் அளிக்கிறார், "கபோதிகளே! இப்படி ஒற்றுமையாக வாழும்போது, ஏன் பிரிவினையென்றும், தனிநாடு என்றும் பேசுகிறீர்கள்?" என்பதாக.

உண்மையாகவே, கட்டுரையாளரின் வர்ணனை கண்டபிறகு, அவரது கேள்வி நியாயமாகத் தானே உள்ளது, தமிழனை வேற்றான் என்று கருதாத மனோபாவம் வடவரிடம் இருக்குமாயின் ஏன் பிரிவினை, தனிநாடு, எல்லாம் என்கிற ஐயம் ஏற்படவே செய்யும். ஏனெனில், அவ்வளவு ஆனந்தத்தோடு முன்னூறு ஆண்டுகளாகயிருக்கிறார்களாம்.

அப்படியிருப்போர்யார்? ஆண்டு மாண்டுபோன திராவிடக் குடியினரா! கழனியிலும் கட்டாந்தரையிலும் பாடுபட்டும் பலன் காணது மெலியும் பழந்தமிழர் இனமா! அல்ல, அல்ல; பார்ப்பனர்கள்.

**ஆவணி அவிட்டத்தை, ஆண்டு தோறும் கொண்டாடுபவர்கள்.**

அமாவாசை, திதி எதையும் அனுஷ்டிக்கத் தவறுதவர்கள்!

சாஸ்திரோக்தமான சடங்குகளைச் சிறிதும் விட்டுக்கொடாதவர்கள்.

இதனையும் அவரே தெரிவிக்கிறார். இவர்கள்தான், இவ்வளவு ஆனந்தத்தோடு இருக்கிறார்கள், அங்கே!

எப்படிக் குடியேறினார்களாம், தெரியுமா? அந்த இடம்தான், ஆச்சரியத்துக்கு மட்டுமல்ல, ஆரியர் எங்கு சென்றாலும் அன்று முதல் இன்று வரை சீரும் சிறப்பும் பெற்று எப்படி வாழ்கிறது, என்பதை விளக்குகிறது.

*

1560-ம் ஆண்டு! அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த ஒரு அய்யங்கார், பரதகண்ட முழுவதிலுள்ள புண்ணிய ஸ்தலங்களை யெல்லாம் பூஜிப்பதற்காக வடநாடு சென்றார்! போன காரியங்களை முடித்துவிட்டு தன் ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்த வேளையிலே, மான்பூம் மாவட்டத்தில் பேரும் புகழுடன் விளங்கிய பஞ்சகோட் ஜமீன்தார் என்பவரைச் சந்தித்தார்.

அய்யங்காரின் மேதா விலாசத்தையும் சாஸ்திரங்களில் பெற்றிருந்த தேர்ச்சியையும் கண்டார் ஜமீன்தார்! இப்படித்தானே, ஒவ்வொரு பேரரசனும் சிற்றரசனும் முதலில் கண்டிருக்கிறான்!

"தேவா! தங்களுடைய அறிவாற்றல் எம்மை ஆட்கொண்டுவிட்டது. எப்போதும் அருகிலேயேயிருந்து, தமியேனை, ஈசுவரார்க் கிருபைக்குப் பாத்திரனுக்க வேண்டும்..."

"என்ன செய்வேன் ஜமீன்தாரே! எனக்கு குடும்பம் குழந்தை குட்டிகளெல்லாம், அம்பாசமுத்திரத்தில் இருக்கிறார்களே ..."

"பொன் தருகிறேன்! பூமி அளிக்கிறேன். உங்களுக்கு ஒரு குறையும் வராமல், பார்த்துக் கொள்ளுகிறேன் ..."

"உண்மையாக இவையெல்லாம் தருவதாகச் சொல்கிறாயா?"

"ஆண்டவனின் அடியார்களாகிய உங்களையோ ஏமாற்றுவேன்?"

அய்யங்கார், புறப்பட்டு ஊருக்குச் சென்றார்! தன்னுடைய தம்பியை அழைத்து, அவனது குடும்பத்தோடு ஜமீன்தாரிடம் அனுப்பிவைத்தார்! அப்படி வந்தவரின் பெயர், ரங்கராஜனும்.

ரங்கராஜனை, ஜமீன்தார், ஏக ஆடம்பரமாக வரவேற்றார். அவரது குடி படைகள் எல்லாம் ரங்கராஜனின் கையினுல் பிரசாதம் பெறுவதைப் பாக்கியமென்று கருதி ஓடிவந்தனர். ரங்கராஜன், ஜமீன்தாரை சாலோக சாமீப சாயுச்ய பதவிக்குத் தயார் செய்ததோடு "சக்தியானுசாரம்" தன்னுடைய பிற்காலத்துக்கும் வழி செய்துகொண்டார்.

**ஸ்ரீ கேசவனுக்கு, பெரியதொரு ஆலயம் எழுப்பப்பட்டது.**

**அதற்குப் பிரதம பூஜாரியாக ரங்கராஜர் நியமிக்கப்பட்டார்.**

**அவரே, ஜமீன் குடிகளுக்கெல்லாம், குருநாதர்.**

**குருநாதர், தேவ காரியங்களைக் கவனிப்பதற்காக அறுபது கிராமங்கள் இனும் அளிக்கப்பட்டன!!**

பஞ்சகோட் ஜமீனில், இப்படியொரு 'பக்த குரு' அவதரித்திருக்கும் செய்தி, சுற்று வட்டாரத்திலுள்ள ஏனைய ஜமீன்தார்களுக்கும் எட்டலாயிற்று. அவர்கள் என்ன 'பஞ்சகோட்டை' விட பஞ்சையா? தத்தமது கீர்த்தியையும் கித்தாப்பையும் காட்டிக்கொள்ள அவர்களுக்கும் மார்க்கம் வேண்டாமா? அதனுல், போட்டி போட்டுக் கொண்டு அவர்களும் பொன்னும் மணியுமாகக் கொண்டுவந்து கொட்டினர், ரங்கராஜன் காலில்!

ஏராளமான பணம்!

நிலம், ஒரு குட்டிஜமீன்தாருக்கு உள்ள அளவு.

சக்தியும் செல்வாக்குமோ, சொல்லுந்தரமல்ல.

இவ்வளவும் ஏற்பட்டதைக் கண்ட ரங்கராஜன், ஜமீன்தாரிடம் சொல்லி,

**குருநாதர் ரங்கராஜருடைய சந்ததியார்கள் மட்டும் இவைகளை வாரிசு பரம்பரையாக அனுபவிக்கும் பாத்தியதை உண்டு!**

என்று எழுதி வாங்கிக்கொண்டார். பிறகு, கேட்கவா வேண்டும்? அக்கா, தமபி, அம்மாஞ்சி, அம்மங்கார் இப்படி. அம்பாசமுத்திரத்திலிருந்து யாரார் வர விரும்பினார்களோ அவர்களையெல்லாம் கொண்டுபோய்க் குடியேற்றிக் கொண்டார் ரங்கராஜகுரு! செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்த சில உறவினர்களுக்கும் அடித்தது, சான்சு!!

1560! முன்னூறு ஆண்டுகளுக்கு முனபு நிகழ்ந்தது, இது.

அதுமுதல், அவர்கள் தனியாக ஒரு "காலனி" அமைத்துக் கொண்டு அங்கே வாழ்கிறார்கள். "காலனி" என்பது கட்டுரையாளரின் சொல்! அதைத்தானே நாம் இங்கே, 'அக்கிரகாரம்' என்கிறோம்!

அங்கிருப்போருக்கு இங்கே கொள்வினை கொடுப்பினை எல்லாம் உண்டு. அங்கே, இப்போதிருக்கும் குருநாதர் பெயர் ராஜகுரு திருமலை ஜகன்னாத ஆச்சாரியகோஸ்வாமி என்பதாம்.

*

ஒரு ஆள் போக, அங்கே ஒரு அக்கிரகாரமே உருவாகிவிட்டது! முன்னூறு ஆண்டுகளாய் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ்கிறார்கள்!!

பஞ்சகோட் ஜமீன்தார், பரமன் கதிக்குப்போக, பாமரர்களைத் தயார் செய்ய இவர்களை அழைத்தார்.

இப்போது அவர்கள், பீகார் அரசில உயர்தர உத்தியோகங்களைப் பெற்று வாழ்கிறார்கள்.

அதனுல், குருக்கள் தொழிலை விட்டுவிட்டார்களோ வெனின் இப்போதும் பல வங்காளியருக்கு இவர்களில் சிலர் குருநாதர்களாம்.

தனியாக ஒரு அக்கிரகாரமே அமைத்துக்கொண்டு ஆனந்தத்தோடு, வாழ முடிகிறது.

அதே சமயத்தில், இங்கும்தான் நெல்லைச் சீமையிலிருந்தும், செங்கற்பட்டுச் சிற்றூர்களிலிருந்தும் நமது அண்ணந்தைகள் — வெளிநாடுகளுக்கு மட்டுமல்ல! — வடநாட்டின் பல பகுதிகளுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களது வாழ்வு எப்படியிருக்கிறது?

தாராவி, ஒன்றுபோதுமே தவிக்கும் இனத்தின தொல்லைகளை விளக்க!

"இந்து", ஏட்டார் சுகமாக வாழும் அவர்களைக் காட்டி, "எதற்குத் தனி நாடு? மொழியும், கலாச்சாரமும் இவர்களுக்கு இடையூரு உண்டாக்குகிறது. இனபமாக வாழவில்லையோ!", என்கிறார்.

உண்மைதான், மொழியும் பழக்க வழக்கங்களும் இவர்களது சுகபோக வாழ்வுக்கு எந்தவித இடையூறும் விளைவிக்கவில்லை!

ஆனுல், இங்கிருந்து சென்ற பிறர், இவ்வளவு சுகமாக வாழ முடியவில்லையே, ஏன்? என்ன காரணத்தால், உழைத்தும் ஊதாரி

களாய்; ஒன்றுக்கும் இலாயக் கற்றவர்களாய் தவித்துத் தத்தளிக்க வேண்டும்? இந்தக் கேள்வி, வரும்போதுதான், 'இந்து'க் கூட்டம் எரிச்சலோடு பார்க்கிறது நம்மை! ஏனெனில், ஆரியம் விதைக்காது விளைகின்ற கழனி. அதனுல், அவர்கள் எங்குபோனுலும், சுகமாக வாழ முடிகிறது— சொத்து சுகங்களைப் பெற முடிகிறது — சமூகத்திலும் அரசியலிலும் தனிச் செல்வாக்குப் பெற இயலுகிறது.

இதற்குள்ள காரணம் என்ன? மதத்துறையில், ஆரியம் தன்னிகரற்று விளங்குவதுதான்! அந்த மதம், இந்தியா முழுவதற்கும் ஒன்று என்று கருதப்படுவதால் காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரை, சீரும் சிறப்பும் பெற்று வாழ்கிருர்கள்!!

இந்தச் சலுகை கிடைப்பதால்தான் இந்துமதப் பெருமைகளைப் பேசுவதோடு, இந்தியா ஒன்ருகவேண்டுமென்பதிலும் பார்ப்பனத் தலைவர்கள் பிடிவாதம் காட்டி வருகின்றனர்.

காடு, பெரிதாயிருப்பது புலிக்குக் கொண்டாட்டம்! நாடு, பெரிதாகயிருப்பது சுரண்டுவோருக்கு நல்லது அல்லவா!

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

நல்லாட்சி, மக்கள் நல்வாழ்வு என்பன போன்ற சுவைமிகு சொற்செல்வத்தை வாரி வாரி வழங்க முடிகிறது! டமாஸ்கஸ் விருந்து நடத்துகிறது, விருந்தும் பெறுகிறது!

ஏதன்ஸ் நகரம், உலக வரலாற்று ஏடு படித்திடுவோர்க்கெல்லாம், இனிப்பூட்டும் பெயர்—எழிலோவியமாகப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே திகழ்ந்ததோர் நகரம்— அதன் நெடுஞ்சாலைகளிலே, உலகை வென்ற வீரர்கள் உலவி இருக்கிருர்கள்—அதன் அங்காடியிலே, அவனி எங்கணுமிருந்து பண்டங்களைக் கொண்டுவந்து குவித்து வாணிபம் நடாத்தியோர் வாழ்ந்திருக்கின்றனர் — அதன் குன்றுகளிலே நின்று காவியம் புனைந்தனர், மலைச் சரிவுகளிலே குருதி கொட்டிச் சுதந்திரத்தை வளர்த்தனர் — ஏதன்ஸ் — ஏற்புடைய எண்ணங்கட்கெல்லாம் பிறப்பிடமாக இருந்திருக்கிறது, பல்வேறு துறைகளிலே வித்தகரானோர் வாழ்ந்திருந்த சிறப்பிடம் ஏதன்ஸ்! அங்கும் சென்ருர் நேரு பண்டிதர்!! எத்தகைய எழுச்சி ஏற்பட்டிருக்கும் அவர் உள்ளத்தில் என்பதை தெளிவாக யூகித்துக் கொள்ளலாம். அந்த எழிலூரில், நேருவுக்கு விருந்தும் உபசாரமும் கிடைத்தது, பிரமுகர்கள் பரிவுடன் பேசினர், பண்டிதர், அந்நகர் வளர்த்து நானிலமெங்கணும் பரப்பிய பண்பாடு பற்றிப் பேசியிருப்பார்! ஏதன்ஸ் நகரில் இற்றை நாளில், ஏக்கம் குடிபுகுந்திருக்கிறது! தாயகத்துடன் சேரத் துடிக்கிறது, சைப்ரஸ் தீவு! அதனைத் தமது ஆதிக்கத்திலே வைத்துக்கொண்டு, அடக்குமுறை மூலம் அந்த ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது பிரிட்டன். அங்கல்லவா செல்கிருர் நேரு பண்டிதர்! அழைக்கப்பட்டுச் செல்கிருர் — மதிப்பளிக்கப்பட்டுள்ள மாபெருந் தலைவர். அவரிடம் நமது குறையினைக் கூறுவோம்; உரிமை வேட்கை மிகுதியால்,பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றியும் பெற்றவரல்லவா பண்டிதர், அவர் அறிவார் உரிமைப் பிரச்சினை உயிரினும் மேலானது என்பதனை, அவரிடம் நாம் நமது உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் விடுதலை ஆர்வத்தைச் சிறிதளவு காட்டிஞல் போதும். இலண்டனில் அமைச்சர்களிடம் எடுத்து இயம்புவார், வாதாடுவார்—என்றெல்லாம் எண்ணிக்கொண்ட ஏதன்ஸ் நகரத்தார், நேரு பண்டிதரை எதிர்கொண்டழைத்து உபசரித்து விருந்து வைபவம் நடாத்தி, வீரரே! தீரரே! என்று அர்ச்சித்து உபசரித்திருக்கின்றனர். நேரு பண்டிதர், அகங் குழைந்துதான் போயிருந்திருப்பார்! அகில முழுதும் புகழ்க் கொடியைப் பறக்கவிட்ட ஏதன்ஸ் நகரம், சாம்ராஜ்யங்கள் பலவற்றினைத் தன் சுட்டு விரல் காட்டி நடாத்திச் சென்ற ஏதன்ஸ் நகரமல்லவா "உதவி" கேட்கிறது — உள்ளம் பூரித்துத் தானே போகும்!

சைப்ரஸ், சின்னஞ் சிறு தீவு தானே—சுண்டைக்காய் அளவுள்ளது—எங்கள் பாரத தேசத்திலே ஒரு தாலுக்கா அளவு இருக்கும்; இதற்காக ஏன் இத்தனை கொதிப்பு, கொந்தளிப்பு? என்று கேட்டாரா? கேட்பாரா?

சைப்ரஸ், கிரேக்கத்துடன் சேர விழைகிறது. தாயைச் சேய் அழைக்கிறது; அந்த பந்தமும் பாசமும், உரிமை உணர்ச்சியும் படைகொண்டு அழித்திடப் போமா, பாவிகள் ஏனே இதனை அறிய மறுக்கின்றனர்? என்று பேசுகிருர், ஏகாதிபத்திய முறையினைச் சாடுகிருர்; இது கேட்டு, ஏதன்ஸ் நகரப் பிரமுகர்கள், இவரன்ருே உரிமையின் அருமைதனை அறிந்தவர்! விடுதலைக் கிளர்ச்சியின் மேம்பாட்டினை உணர்ந்த உத்தமர் இவரன்ருே! மனுச் செய்தோம், அசட்டை காட்டினர், மன்ருடினேம், மமதை பொழிந்தனர்; கண்ணீர் பொழிந்தோம், கைகொட்டிச் சிரித்தனர்; கிளர்ச்சியில் ஈடுபட்டோம், சுட்டுத்தள்ளுகின்றனர்; இந்த வெறிச் செயலைக் கண்டிக்க, எங்கோ ஓர் கோடியில் உள்ளநாடு, ஏற்றம் பெருதார் உள்ள நாடு, வெள்ளையருக்கு வேட்டைக் காடு, என்றெல்லாம் இகழ்ந்துரைக்கப்பட்டு வந்த இந்தியாவிலிருந்து வந்துள்ள நேரு பண்டிதருக்கு நெஞ்சு உரமும் நேர்மைத் திறனும் இருந்திடக் காண்கிருேம்; இத்தகைய கருத்து வளமும் கருணை உள்ளமும் இவருக்கு இருப்பதனுலன்ருே இவரை மனிதருள் மாணிக்கம் என்று புகழ்கின்றனர் என்று பாராட்டியிருப்பர். ஏதன்ஸ் நகரமே நேரு, நேரு! என்று புகழுரையைச் சொரிந்திருக்கும்.

**சரண் அடைந்தால் உயிர்தப்பலாம்! இல்லையேல், சுட்டுத்தள்ளப்படுவீர்கள்!!**

தாக்கிது பறக்கிறது, பட்டி தொட்டிகளிலெல்லாம்! பிடிபட்டனர், சுடப்பட்டனர்; தாக்கப்பட்டது தகர்க்கப்பட்டது; என்று மக்களில் ஒரு பிரிவினர் பீதியுடன் பேசுகின்றனர். நீங்களும், உங்கள் அடக்குமுறையும்!—என்று கேலி பேசியபடி சிலர், குன்றேறிக் கூவுகின்றனர், அதோ, அதோ! என்று காட்டியபடி படை வீரர்கள் அவர்களைத் துரத்துகின்றனர்; அந்த வீரர்களோ எந்தப் பிலத்திலே நுழைந்தனரோ, எந்தக் கணவாயில் பதுங்கினரோ தெரியவில்லை, படை வீரர்கள் கால் கடுக்கக் கடுக்க நடந்து சென்றதுதான் மிச்சம் என்று ஆயாசப்பட்டபடி, வெறுங் கையுடன் திரும்புகின்றனர்.

**முற்றுகையிட்டு முறியடிப்போம்! படைகளைக் குவிப்போம், பகையினை முடிப்போம்.**

என்று ஏடு எழுகிறது உத்தரவு! படைத் தலைவர்கள் தூக்கிச் செல்லப்படுகின்றனர்; அதிகாரிகள் திக்குத் தெரியாத இடத்திலே

கொண்டுபோய்விடப்படுகின்றனர்; காட்டிக் கொடுப்போர் வெட்டித் தள்ளப்படுகின்றனர்; பேதமும் பிளவும் மூட்டுவோர் எச்சரிக்கப்படுகின்றனர்; இது என்ன களம்? இவர்கள் நடத்தும் போர் இவ்வளவு 'மாயசக்தி' வாய்ந்ததாக இருக்கிறதே; பீரங்கிக்கும் பெரும் படைக்கும், டாங்கிக்கும் விமானத்துக்கும் இவர்கள் அஞ்சுவதாகக் காணோமே, திடீரென்று கிளம்புகிறார்கள், திணற அடிக்கிறார்கள், திருப்பித் தாக்கத் தயாராகித் தேடிப் பார்த்தாலோ, ஒரு ஆளும் தென்படக்காணோம், இவர்களை எங்ஙனம் அடக்க முடியும்; துரைத்தனமோ இவர்களை அழித்தே யாகவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துவிட்டது, நாம் என்ன செய்வது! காஷ்மீர் களம் இதனை விட ஆயிரம் மடங்குமேல்! நிச்சயமாக! — என்று பெருமூச்சுடன் பேசுகின்றனர் பட்டாளத்துப் பெரிய ஆசாமிகள்.

**தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

**கலகக்காரரின் கோட்டைகள் தாக்கப்படுகின்றன.**

**புரட்சிப் படைகள் சின்னாபின்னமாகின்றன.**

**கலகத் தலைவர்களை மக்கள் கண்டிக்கின்றனர்.**

**நிலைமை வேகமாகச் சீர்திருந்தி வருகிறது.**

**கலகக்காரரின் ஆவேசம் குலைந்துவிட்டது.**

இவ்விதமாகவெல்லாம் துரைத்தனம் அறிக்கைமேல் அறிக்கை விட்டு, தன் பிரதாபம் கெட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளும்வேலையை வேறு கவனித்துக்கொள்ள வேண்டி நேரிட்டுவிட்டது.

**எப்படி இருக்கிறது நிலைமை? இன்னமும் கலகம் ஒழியவில்லையா?**

என்று வெளி நாடுகளிலிருந்தெல்லாம் கேட்கிறார்கள்.

**சிறு சுயநலக் கும்பல்—கொள்ளைக் கூட்டம்**

என்று எந்த எதிர்ப்பாளர்களைப் பற்றி ஏசிப் பேசினரோ, அந்த எதிர்ப்பாளர்களை அடக்க, ஒடுக்க, படைகள் சென்றும் வெற்றி கிட்டாமலிருக்கும் நிலைமை இருப்பது தெரிந்தால், துரைத்தனத்துக்கு மதிப்பு எப்படிக் கிடைக்கும்! எனவே கலகக்காரர்களிலேயே பிளவு ஏற்பட்டுவிட்டது; தலைவனின் வலது கரம்போலிருந்தவனே விலகி தலைவனின் தகாத போக்கைக் கண்டிக்கிறான்: ஊர் மக்களெல்லாம் கூடி, இனி எமக்கு இந்தத் தலைவனே வேண்டாம் என்று உறுதியுடன் கூறிவிட்டனர்; ஆதரிப்பாரற்று, அடவியில் பதுங்கியும் அருவியில் மூழ்கியும் அலைந்து திரியும் கலகத் தலைவன், நாளையோ மறுநாளோ சரண் அடையப்போகிறான்! — என்று 'பிரசாரம்' செய்து பார்த்தனர். மக்கள் நம்ப மறுத்தனர்; வெளி நாடுகள், கண் சிமிட்டின;

## எல்லாம் நாகநாடு நிலைமை!

சைப்ரஸ் தீவு, கிரீசுக்குத்தான் சொந்தம்; தாயகத்துடன் தீவு சேர்ந்திட விழைவதைத் தடுப்பது தகாது; தேசியக் கிளர்ச்சியை ஒடுக்க, அடக்குமுறை வீசுவது மன்னிக்க முடியாத குற்றம்; உரிமைக்காகப் போரிடும் உத்தமர்களைத் தூக்கிலிடுகிறார்கள், சுட்டுத் தள்ளுகிறார்கள், சிறையில் தள்ளிச் சித்திரவதை செய்கிறார்கள், பாதிரியாயினும் பள்ளி மாணவனாயினும், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபடுவது தெரிந்தால், பிடித்திழுத்துச் சென்று பேயாட்டம் நடத்துகிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்று அறியும்போது என் உள்ளம் அனலிடு மெழுகாகிறது, கண்களில் கனலும் புனலும் சுரக்கிறது; என்று கனிவுடன் பேசிடும் நேரு பண்டிதருடைய ஆட்சியிலேதான், பன்னெடுங் காலமாக, சாம்ராஜ்யாதிபதிகளும் சாம்ராட்டுகளும் டில்லியில் அரசோச்சிய காலத்திலும், தனி அரசு செலுத்திக்கொண்டு வந்த **நாக நாடு** இன்று டில்லியிடம் அடிமைப்பட மறுக்கிறது, விடுதலைப் போர் நடத்துகிறது. **ஏதன்ஸ் நகர், இதனை அறியாது.**

சைப்ரஸ் தீவுக்கு உரிமை வழங்குவதுதான் நியாயம் என்று பேசும் நேரு, சுதந்திரம் கேட்கிற நாகநாட்டின் மீது படைகளை ஏவி இருக்கிறார் என்பதை அறியாது! நேரு பேசுவதைத்தான், ஏதன்ஸ் கேட்கமுடிகிறது, நேருவின் பீரங்கிகள், நாகநாட்டுக் குன்றுகளைப் பிளந்திடும் சத்தத்தையும், துப்பாக்கிகள் நாகர்களின் நெஞ்சைத் துளைத்திடும் சத்தத்தையும் கேட்டிட முடியவில்லை; வாய்ப்பு இல்லை! இது தெரியும் நேருவுக்கு—எனவே நாகநாட்டை நசுக்கிக் கொண்டிருக்கும் கோலத்தை மறைத்துக்கொண்டு, "அந்தோ! என்ன அநியாயம்! விடுதலை கோரும் சைப்ரஸ் மீது குண்டு பொழிகின்றனரே கொடியவர்கள்" என்று கூறிக்கொண்டே கண்களைக் கசக்கிக் காட்டுகிறார்; ஏதனஸ், "மனிதருள் மாணிக்கமே! மகாத்மாவின் வாரிசே!" என்று வாழ்த்துகிறது, ஏதன்சில் என் வேலை முடிந்தது. இனிச் செல்ல வேண்டிய இடம் நோக்கி, விமானத்தைக் கிளப்பு என்று களிப்புடன் கூறுகிறார் நேரு பண்டிதர்.

நாமும் சென்று பார்ப்போமே, தம்பி! ஆனால், நேருவின் ஆட்சியிலே உரிமைகள் அழிக்கப்படுகின்றன, மொழியும் கலையும் நசுக்கப்படுகின்றன என்றுமட்டும் கூறிவிடாதே—புருவத்தை நெரிப்பார், போக்கிரிகளே! பாருங்கள் உங்கள் கொட்டத்தை அடக்குகிறேன்!— என்று மிரட்டுவார் — இரத்தக் கறை படிந்த கரமடா, தம்பி, ஈவு இரக்கமற்ற மனம்!

அதோ, பண்டாரநாயகா அதைத் தெரிந்தவர்போலல்லவா சிரிக்கிறார். பாரததேசம் இமயம்முதல் குமரிவரையில்! இலங்கைக்கு ஒப்பிட்டால்—ஏ! அப்பா! பெரிய நாடுகளைக் கண்டு சிறிய நாடுகள் கிலி கொள்ளுவது என்றால், இலங்கை இதற்குள் நடுநடுங்கிப் போயிருக்கும். ஆனால் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகாவைப் பார், கெம்பீரமாக, இலண்டனில் உலவுகிறார்.

**"இலங்கை இனிக் குடிஅரசு நாடு! இலங்கையில் பிரிட்டிஷ் தளம் இருக்கக் கூடாது!!**

என்று முழக்கமிடுகிறார்—அங்கேயே.

பிரிட்டிஷ் சிங்கத்தை அதன் குகையில் நுழைந்தே, பிடரி பிடித்துக் குலுக்குவேன்—என்று காலஞ்சென்ற சத்திய மூர்த்தி கூறுவார்! பண்டாரநாயகா இலண்டனிலேயே, பிரிட்டிஷ் பிடியை உடைத்தெறியப்போகிறேன் என்று முழக்கமிடுவது, அபாரமான வீரமென்று நான் கூறவில்லை—அதிலும் அந்தச் சிங்கம் பல்போன நிலையில் இருக்கிறது! ஆனால் நேருபண்டிதரை, நேருக்கு நேராகச் சந்தித்த துணிவு இருக்கிறதே அது உண்மையாகவே ஆச்சரியப்படத் தக்கதுதான்!

என்ன காரியம் செய்துவிட்டு, சீமைவந்திருக்கிறார்.

தமிழர்களைப் படுகொலை செய்துவிட்டு, இலண்டன் வந்திருக்கிறார்.

சித்திரவதைக்கு ஆளான தமிழ் மக்களுடைய கண்ணீர் உலரக்கூட இல்லை, நேரு பண்டிதரைச் சந்திக்கிறார்.

நேருபண்டிதர் எனக்கு நண்பர் என்றல்லவா கூறிக்கொள்கிறார்—எனவே கண்டதும் இருதலைவர்களும் கனிவு ஒழுகத்தான் பேசிக்கொள்வர்

"மெத்தச் சிரமம் தங்களுக்கு... நீண்ட பயணம்"

"ஆமாம்! என்னசெய்வது? ஈடன் ரொம்பத் தொல்லை தருகிறார்!"

"தங்களைக் கண்டால், என்ன பேசுவது, தங்கள் பஞ்சசீலம் பாரெல்லாம் பரவி வருகிறதே, நாட்டோவும் சீட்டோவும் கேட்பாரற்றுப் போய்விட்டனவே, இனி நமது கதி என்ன? இனியும் எதற்காக அணுகுண்டு என்று பண்டிதர், கேட்டுவிட்டால் என்ன பதில் அளிப்பது என்று எண்ணி எண்ணி அந்தத் திகிலாலேயே, ஐசனவர், பாபம், படுத்த படுக்கையாகிவிட்டார்!"

"நாசர் வேறு, கெய்ரோவில்வந்து தங்கியாகவேண்டும் என்று பிடிவாதம் செய்கிறார்"

"ஆமாம்! இதற்கெல்லாம் எப்படி உடம்பு இடங்கொடுக்கிறது"

"மனம்தான் காரணம்!"

"மனமென்றால் அது என்ன சாமான்யமானதா! மார்க்ஸ்செய்த தவறுகளையே கண்டறியும் வளம் நிரம்பியதல்லவா!"

"நான், மனவளம்தான் உலகின் உண்மையான செல்வம் என்று கூறுவேன்"

"சந்தேகமென்ன! பண்டிதரே! பம்பாய் விஷயமாக, என்ன "ரகளை" தீர்ந்தபாடில்லையே"

"ஆமாம், நான், பரிதாபப்பட்டு, பயல்களை ஏதோ பேசட்டும் என்று விட்டுவைத்திருந்தேன். அதுகள் இப்போது தலையை விரித்துக்கொண்டு ஆடுகின்றன. செச்சே! இனி இதனைத் துளியும் அனுமதிக்கக் கூடாது என்று, பலாத்காரத்தை ஒடுக்கியே தீரவேண்டும், இதிலே ஈவு இரக்கம், பரிவு பாசம், தத்துவம் இவைகளைப் பற்றி எண்ணிக் குழப்பமடையக் கூடாது, உறுதிவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துவிட்டேன"

"அதுதான் முறை! ஈவு இரக்கம் என்று இதோபதேசம் பேசுவது நல்லதுதான். ஆனால் பலாத்காரத்தை எப்படி அனுமதிக்க முடியும்? ஒழித்துக்கட்ட வேண்டியதுதான். எத்தனைபேர் பிணமானாலும் கலங்கவோ, கவலைப்படவோ கூடாது—பலாத்காரத்தை அழித்துத் தீர வேண்டும் — ஜனநாயகக் கடமைகளிலே முக்கியமானதாயிற்றே. தங்களுக்கா, தெரியாது. ஆனால், சுயராஜ்யக் கிளர்ச்சிக் காலத்திலே, உரிமைபற்றிப் பேசியதை எல்லாம் இப்போதும் எண்ணிக்கொண்டு, தங்கள்தேசத்தவர் சிலர் தலைகால் தெரியாமல் ஆடுகிறார்கள்"

"மட்டந் தட்டிக்கொண்டு வருகிறேன். புறப்படுவதற்கு முன்பு சொல்லிவிட்டுத்தான் வந்தேன், எலெக்ஷன் முறையையே மாற்றிவிடவேண்டும் என்று. 'ஓட்டு' ஒன்று இருக்கிறது என்பதாலே தலைகால் தெரியாமல் குதிக்கின்றன"

"ஆமாமாம்! மொழிச் சண்டையைப் பாருங்களேன்......"

"வெறி அளவுக்குச் செல்கிறது......"

"அந்த வெறியைச் சமாளிக்க பண்டிதரே! மெத்தச் சிரமப்பட வேணடி இருக்கிறது"

"வெளிநாட்டுக்காரர் தூண்டி விடுகிறார்கள்..."

"அதேதான் இலங்கையிலும். வெளிநாட்டுக்காரர்தான், தமிழர்களை தூண்டிவிடுகிறார்கள்"

"நிலைமை இப்போது எப்படி இருக்கிறது"

"ஏன், சென்னை சர்க்கார் ஏதாவது கேட்டதா?"

"அதெல்லாம் இல்லை. பொதுவாக உலகப் பிரச்சினைகளிலே அது ஒன்று என்பதால் கேட்கிறேன்"

"நிலைமை கட்டுக்கு எப்போதோ அடங்கிவிட்டது. வெட்டி வீழ்த்திவிட்டோம் — குழிதோண்டிப் புதைத்துவிட்டோம்—தவறான வழி சென்ற ஜனங்களை"

"தமிழர்களிடம் மெத்த மனக் கொதிப்பு ஏற்பட்டுவிடும்..."

"அப்படித்தான் பலபேர் என்னிடம் சொன்னார்கள். நான் சொன்னேன்,போங்களடா புரியாத பேர்வழிகளே! நேரு பண்டிதருக்கு நிலைமை தெரியாதா என்ன? பஞ்சாபிலும் மராட்டியத்திலும், நாக நாட்டிலும் பிற இடத்திலும், பலாத்காரம் கண்டதும் பண்டிதர், படையையே அனுப்பி அடக்கினவராயிற்றே — அவருக்கு ஆட்சிப் பொறுப்பும், அதிலுள்ள சிக்கலும் தெரியாதா? அவர் இதனைத் தமிழர்களுக்கு எடுத்து விளக்குவார் என்று கூறினேன்."

தம்பி, பண்டாரநாயகா இது போல் வாதாட வாய்ப்பு இருக்கிறது—நேரு பண்டிதரின் நடவடிக்கையே அந்த வாய்ப்பை அளிக்கிறது என்ற துணிவு இருக்கவே தான், தமிழ் இரத்தம் படிந்த கரத்தைக் கழுவிடவும் முயற்சிக்காமல், இலண்டன் மாநாடு சென்றிருக்கிறார்.

தட்டிக் கேட்கும் துணிவும் பண்டிதருக்குக் கிடையாது—பண்பும் பட்டுப்போய் விட்டது.

எதைக் கேட்டால், எதைச் சுட்டிக் காட்டுவார்களோ என்ற பயம், பிய்த்துத் தின்கிறது அவரை, பாபம்!

உரிமையை மறுக்கலாமா, சத்யாக்கிரகத்தை அடக்கும் முறை கொண்டு அடக்க முற்படுவது அறமாமா, மக்களின் இதயநாதமெனத் தகும் மொழி, கலை, ஆகியவற்றினை அழித்தொழிக்கும் செயல் ஆகுமா, அடுக்குமா? — என்று எதைப் பண்டிதர் எவரிடம் கேட்டாலும், எவருக்கும், என்ன பதிலளிப்பது என்ற கலக்கம் ஏற்படக் காரணம் இல்லையே.

**பம்பாய்**
**பஞ்சாப்**
**கல்கத்தா**
**சென்னை**
**நாக நாடு**

என்று நீண்டதோர் பட்டியலைக் காட்டியல்லவா அவர்களால் பேச முடிகிறது! எனவேதான் பண்டிதரின் சுற்றுப்பயணம் பெரும்பாலும் விருந்து மயமாகக் காணப்படுகின்றதேயன்றி, விவாதம், நியாயம் காணப் பேசுதல், தன் நாட்டு மக்களைப் பிற நாட்டார் இழிவாகவும் இம்சையுடனும் நடத்துவதுபற்றி கொதித்தெழுந்து கேட்பது, போன்ற எந்த நடவடிக்கையிலும் ஈடுபட இயலவில்லை. டமாஸ்கஸ் விருந்து இலண்டன் வரையில், தலைநகர்களிலே விருந்து வைபவங்கள், சுவையான உபசாரப் பேச்சுக்கள், ஆங்காங்கு உள்ள உரிமைப் பிரச்சினைகளுக்குப் பேராதரவு காட்டும் போக்கு, இவ்வளவுடன் முடிந்து விடுகிறது.

இலண்டன் செல்கிறார்—செல்லுமிடத்தில், தமிழரைக் கொடுமை செய்யும் பண்டாரநாயகாவைக் காண்பார், கொடுமையைக்கைவிடு இல்லையேல் என் கொற்றம் சீறி எழும் என்று எச்சரிக்கை விடுப்பார், ஆப்பிரிக்க மனு ஸ்ட்ரீடம் வருவார், அவருக்கு நிறவெறி தலைக்கேறியிருப்பது தெரியும் பண்டித

ருக்கு, எனவே அதனைக் கண்டிப் பார், பாகிஸ்தான் பிரதமரைக் காண்பார், காஷ்மீர் பிரச்சினைக் குப் பரிகாரம் தேடுவார் — என் றெல்லாம் பாமர மனம் எண்ணு கிறது, ஆனல் அவரோ, பாருக் கெல்லாம் நல்லவராகப் பார்க்கிருர் படுகொலைசெய்பவனையும், தோலி ருக்கச்சுளைவிழுங்குபவனையும்தோழ னுகக் கொண்டு, தொல்லை நிரம்பிய உலகுக்கு நான் சொல்லிவருவது ஒன்றுதான், அதுதான் பஞ்ச சீலம்—அதை நான் இரங்கூனில் சொன்னேன், பீகிங்கில் சொன் னேன், பாரிசில் பேசினேன், நியூ யார்க்கில் எடுத்துரைத்தேன், மாஸ்கோவில் சொன்னேன் பெல் கிரேடில் பேசினேன், இங்கும் சொல்கிறேன், என் தேசத்திலும் சொல்லுவேன் என்று பேசிவிட்டு, பாராட்டுரையைப் பெற்றுக் கொண்டு தாயகம் திரும்புகிருர்— மீண்டும் மடகாஸ்கர் செல்லப் போகும் 'சேதி'யை மன்னுர்குடிக்கு வந்து கூறுவார்.

**மக்கள் பட்டினி கிடப்பர், வறுமை கொட்டும், வேலையில் லாத் திண்டாட்டம் வாட்டும்.**

**அகவிலை தாக்கும், உரிமை பறிபோகும், அடக்குமுறை அவிழ்த்துவிடப்படும்.**

**வடநாடு கொழுக்கும், திராவிடம் தேயும்.**

ஐயோ! — என்று சொன்னல் ஆஹா! தேசத் துரோகி!—என்று கொக்கரிப்பர், இதற்காகவா எமக்கு ஒரு நேரு? என்று கேட் டாலோ, பிடி சாபம் என்று மிரட்டு வர்! பொல்லாத காலமடா தம்பி, மிகப் பொல்லாத காலம்! ஆனல் பொழுது புலரத்தான் போகிறது! அதுவும் உன் ஆற்றலால்தான். அதுவரையில், அவர் டமாஸ்கஸ் செல்லட்டும், ஏதன்ஸ் காணட்டும், இலண்டனில் விருந்து பெறட்டும்- நீ மட்டும் தம்பி, நாட்டு மக்களிடம் பண்டிதரின் பரிபாலனத்திலே நெளிந்து கிடக்கும் அவலட் சணத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டு இரு—ஓயாமல் கூறு— நம்ம காமராஜர் கோபித்தாலும் கவலைப்படாமல் கூறு — தேர்தல் வருகிறது இப்போதேனும் தெளி வும் துணிவும் பெறுக! உரிமையும் வாழ்வும் கேட்டிடுக! என்று அனை வருக்கும் எடுத்துச் சொல்லிக் கொண்டிரு. பொழுது நிச்சயம் புலரும்.

அன்பன்,

**அண்ணாத்துரை.**

# 'திராவிட நாடு'—வினேபா கருத்து.

'திராவிட நாடு' திட்டம் குறித்து வினேபா ஆவலுடன் பல தகவல்கள் கேட்டதும், நான் அவருடன் அது குறித்து உரையாடியதும் அனைவரும் அறிவர்.

சிறிய நாடுகள் பெரிய நாடுகளுக்கு இரையாகிவிடாதா? —என்று என்னை வினேபா கேட்டது தவிர, வேறு எதிர்ப்புக்கான காரணம் ஏதும் பேசவில்லை; அவர் கேட்ட அந்தக் கேள்விக்கும் நான் பதில் அளித்தேன்.

சுதந்திரத் திராவிட நாடு கூடாது—என்று, வினேபா கூறுவதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

ஆனல் ஆந்திரம், தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு முழு மாகாண சுயாட்சி அளித்திட வேண்டும் என்றும், அதனை டில்லி தர இசையும் என் றும் வினேபா கூறியதாகச் செய்தி காணப்படுகிறது.

இயல்பாகவே நான் அவரிடம் பேசிவிட்டு வந்ததால்—வினேபா திராவிடத் தனி நாட்டுக்கு ஆதரவு காட்டுகிருரோ என்ற சந்தேகமும் அச்சமும் காங்கிரஸ் வட்டாரத்திலே எழுந்திருக்கக்கூடும்.

அதைப் போக்கவேண்டி வினேபா, இந்தச் செய்தியைக் கூறியிருந் திருக்கக்கூடும்.

சிறிதளவு பேசியதன் மூலம் திராவிட நாடு பிரச்சினையை வினேபா ஆதரிக்கும்படி செய்துவிட என்னல் மட்டுமல்ல, யாராலும் ஆகாது.

எனவே வினேபா, திராவிடத் தனிநாடு கோரிக்கையை ஆதரிக்க வில்லை என்ற செய்தி எனக்கு அதிர்ச்சியையோ, ஏமாற்றத்தையோ அளிக்க வில்லை.

எனினும் சிறு நாடு என்ற காரணம் காட்டி பிரச்சினையை எதிர்ப்ப தானல், இதனினும் சிறு நாடுகள் பன்னெடுங் காலமாகச் சுதந்திர நாடுக ளாகப் பாங்குடன் வாழ்ந்து வருவதைக் காட்டுவதுடன், சிறு நாடு என்று திராவிடநாடு கருதப்படத்தக்க அளவினதல்ல என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஆந்திரம், கேரளம், தமிழகம், கருநாடகம் என்னும் நான்கு மொழி வழி அரசுகளும் கூட்டாட்சித் திட்டமான திராவிட நாடு அமைத்துக் கொண்டு, வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபடவேண்டும் என்பதுதான் நமது திட்டம்.

இந்தக் கூட்டாட்சி, சிறியதுமல்ல; 'தன்னுட்சிக்கு ஏற்ற தகுதி படைத்ததல்ல' என்றும் எவரும் கூறிவிட முடியாது.

போர்ச்சுகலும் ஸ்பெயினும், பிரான்சும் ஜெர்மனியும், சுவிட்சர்லாந் தும் பெல்ஜியமும், நார்வேயும் ஸ்வீடனும், கிரீசும் இத்தாலியும், அல்பேனி யாவும் இஸ்ரேலும், தனி நாடுகள்—திராவிட நாடு இவைகளைக் காட்டிலும் பெரிய அளவு.

தமிழகத்தின் அளவுகூட இல்லாத நாடுகள் பல, தனிக் கொடி பறக்கவிட்டுத் தன்னுட்சி நடத்தித்தான் வருகின்றன.

இந்தியப் பேரரசின் பிடியிலிருக்கும் தமிழகம் தத்தளிக்கிறது பல் வேறு வழிகளில்; ஆனல், தனி நாடாக உள்ள பல சிறு நாடுகள், சீருடன்- சிறப்புடன் வாழ்ந்து வருகின்றன.

போர் நடத்தியேனும் 'சுதந்திரம்' பெற வேண்டும் என்று துணிந்து இறங்கியுள்ள அல்ஜீரியா, திராவிட நாட்டைவிட அளவிலும் சிறியதுதான்— வளத்திலும் அவ்விதமே.

எனவே, திராவிட நாடு சிறிய நாடு என்று கூறுவதில் பொருள் இல்லை; சிறிய நாடுகள் சுதந்திர நாடுகளாக இருக்கவே கூடாது என்று எந்த அரசியல் 'தர்மமும்' கட்டளையிடவுமில்லை; வரலாறும், சிறு நாடுகள் அழிந்து போகும் என்பதை எடுத்துக்காட்டும் பாட புத்தகமாகவும் இல்லை.

என்னுடன் பேசியதால், திராவிட நாடு பிரச்சினைக்கு வினேபா ஆதரவு அளித்துவிட்டிருக்கக்கூடும் என்று எண்ணி ஏக்கமுற்ற காங்கிரஸ் காரர்கள், வினேபாவின் கருத்து கண்டு மகிழ்வர்; அவர்களுக்கு அது ஒரு இனிப்புப் பண்டம். நான் ஆதரவு கிடைத்திடும் என்று எதிர்பாக்கவில்லை; எனவே, ஏமாற்றமுமடையவில்லை.

ஆதரவு—அல்லது எதிர்ப்பு காட்டும் அளவுக்கு, பிரச்சினையை அலசிப் பார்த்துப் பேச, அந்தச் சந்திப்பு போதுமானதாகவும் அமைய வில்லை.

பிரச்சினை பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வினேபா ஆர்வம் கொண்டிருக்கிருர் என்பது எனக்கும் புரிந்தது; பிரச்சினையில் நான் ஆர்வம் கொண்டிருக்கிறேன்—ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்பதை அவர் அறிந்துகொண்டிருப்பார் என்று நம்புகிறேன்.

# உலக அரங்கில்

## கென்யா

பிரிட்டனின் பிடியிலிருந்து விடுபடவும், நிறவெறியை எதிர்த்தும் போராடி வரும் 'மாவ்மாவ்' கிளர்ச்சிக்காரர்கள் 1017 பேர் கடந்த நான்கு ஆண்டுகளில் தூக்கில் தொங்கவிடப்பட்டனரென்று பிரிட்டிஷ் காலனி விவகார மந்திரி ஜான் ஹேர் தெரிவித்துள்ளார். சட்டவிரோதமாகத் துப்பாக்கிகள் வைத்திருந்தது, சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகச் சபதம்செய்தது, கிளர்ச்சிக்காரர்களுக்கு உணவு உடை முதலிய பொருள்களைச் சேகரித்தது, ஆகியவைகளுக்குக் கூட அங்கு தூக்குத் தண்டனை தான் விதிக்கப்படுகிறதாம்!

## மலேயா

எப்படி இங்கிலாந்து ஒரு மன்னராட்சிக்குள்ளிருக்கிறதோ அதுபோல மலேயாவும் மன்னராட்சிக்குள் இருக்க வேண்டுமென்று மலேயாவிலுள்ள சில சங்கங்கள் கோரியுள்ளனவாம். மலேயா, சுதந்திரமடைந்ததால் அதனுடைய எதிர்கால அரசியலை வகுப்பதற்காக ரீட் என்பார் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. அக்கமிஷனுக்கே, இக்கோரிக்கை வைக்கப்படுகிறதாம். அப்படி ஏற்படும் மன்னரை 'ஸ்ரீமகாராஜா' என்று அழைக்கலாம் என்று இக்கோரிக்கை சொல்கிறது. மேற்படி சங்கங்கள் நிறைவேற்றியுள்ள இன்னும் சில தீர்மானங்களைப் பார்க்கும்போது, மிகவும் பிற்போக்கு வாதிகளின் முயற்சிகள் என்று தெரிகிறது.

## சீனு

சீனுவில் முடியாட்சி எப்போதோ ஒழிக்கப்பட்டுவிட்டது! எனினும் ஓராண்டுக்கு முன்னர், தாங்கள் பழைய மன்னர்களின் பரம்பரை என்று சொல்லிக்கொண்டு, சிம்மாசன உரிமை தங்களுக்கிருப்பதால் விரைவில் அரசபீடம் ஏறப்போவதாகக் கூறிய வண்ணம் 27 பேர் முயற்சித்து வந்தார்களாம். இவர்கள் காடுகளிலும், குகைகளிலும் தங்கிய வண்ணம் இந்த முயற்சிக்கு ஆதரவு திரட்டினார்களாம். சியாங்கே ஷேக்கின் தூண்டுதலாலும், புதிய ஆட்சியின் புரட்சிப் பாதை பிடிக்காததாலும், சேர்ந்த சதிகாரர்களைக் கண்டுபிடிப்பதில் மாசேதுங் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்தபோது இவர்களும் சிக்கினார்களாம்! — இந்தச் சேதியை 22-ந் தேதி பாதுகாப்பு மந்திரி லோ-சிங் தெரிவித்துள்ளார்.

## ஆண்டி நாடு

வருகிற 1960ல் சுதந்திரமாகப் போகிறது, சோமாலிலாந்து எனும் தேசம்! இத்தாலியரின் பிடிப்பிலிருக்கும் இது, இப்போது ஐ. நா. சபையின் பார்வையிலிருக்கிறது. இது சுதந்திரம் பெறும்போது, 'ஆண்டி நாடாக' விளங்கும் என்று எச்சரிக்கிறார் இந்திய இலாக்கா இல்லா மந்திரி கிருஷ்ணமேனன்! இத்தாலியரின் பிடிப்பிலிருப்பதால் இதன் செல்வச் சீரழிவுக்கு இத்தாலியரே காரணமாயிருக்கக்கூடுமெனக் கருதப்படுகிறது. இதன் நிதி நிலைமையைச் சரிக்கட்ட இத்தாலி, எந்த உதவியும் அளிப்பதில்லையாம். தன் கையைவிட்டுப் போகப்போகும் நாட்டுக்கு ஏன் உதவ வேண்டும் என்கிற எண்ணம்போலும். "ஆண்டியான ஒரு நாடு பிறகு எப்படி சுதந்திரமாக வாழ முடியும். ஆகவே நாம் இப்பிரச்னையைக் கவனிக்க வேண்டும்" என்கிறார் மேனன், உலக நாடுகள் சபையில்.

## சையாம்

அண்மையில் ஒரு மின்சார நிலையம் நிறுவ சையாம் சர்க்காருக்குப் பணம் தேவைப்பட்டது. என்ன செய்தார்கள் தெரியுமா? நமது சர்க்காரைப்போலக் கட்டாயக் கடன் விதிக்கவில்லை! 'லாட்டரி' நடத்தினார்கள்! முதல் பரிசு ரூபாய் 12 இலட்சம் என்று விளம்பரப்படுத்தி, பெரிய பரிசுத் திட்டங்களை வெளியிட்டார்கள்—விரைவில், விரும்பிய பணம் சேர்ந்துவிட்டதாம்.

## பிரிட்டன்

கடந்த வாரம், ஸ்டாலினைப்பற்றி ரஷ்யத் தலைவர்களின் போக்கை இத்தாலி நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி கண்டித்திருந்ததல்லவா? இப்போது, பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி, காரசாரமாகக் கண்டித்துள்ளது. "எப்படி ஸ்டாலின் மட்டும் இவ்வளவு குற்றங்களைப் புரிந்ததாகச் சொல்ல முடியும்?" என்று கேட்கிறது, அது. இதேபோல, முன்பு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியும், ரஷ்யத் தலைவர்களின் போக்கைக் கண்டித்திருப்பது, கவனமிருக்கலாம்.

## ஹாலிவுட்

பிரபல அமெரிக்கத் திரைப்பட உற்பத்தியாளரான டாரிங்ஜானக் என்பவர், "ஸ்டாலின் செய்த இரகசியக் குற்றங்கள்" என்கிற படத்தைப் பிடிக்கப்போகிறாராம். ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் க்ருஷ்சேவ், ஸ்டாலினைப் பற்றி வெளியிட்ட கருத்துக்களின் அடிப்படையில் இப்படம் அமைந்திருக்குமாம்.

REGD. NO. M. 4642 போன் நெ. 15

படத்தில் காணப்படுகிறவன்,அமெரிக்காவையே எத்திப் பிழைத்தவனாகும். பி. டி. பர்னம் எனும் பெயர்கொண்ட இவன் தன்னை, "அம்பக் செய்பவர்களின் அரசன்," என்று அழைத்துக்கொண்டதோடு, "உலகத்திலுள்ள 'அம்பக்'குகள்," என்பது குறித்து ஒரு நூலும் எழுதியுள்ளான்.

மக்களை ஏமாற்றுவதில் இவனுக்கோர் அலாதி ஆசை! ஒரு சமயம், பத்திரிகைகளில், "அதிசயக் குதிரை. காணவாரீர்! தலையிருக்கிற இடத்தில் வால் இருக்கிறது; வால் இருக்கிற இடத்தில் தலையிருக்கிறது", என்று விளம்பரம் செய்தானாம். கேட்ட தொகையைச் செலுத்திவிட்டு, இந்தக் குதிரையைப் பார்க்க ஏராளமானோர் கூடிவிட்டார்களாம். போய்ப் பார்த்தால், சாதாரணமாக எல்லோரும் பார்க்கிற ஒரு குதிரைதான் நின்றதாம். ஆனால், தீனிவைக்கிற இடத்தில் அதன் வால் புறம் இருப்பதாகத் திருப்பிக் கட்டி வைத்திருந்தானாம்! 'என்ன?' என்று கேட்க, 'தெரியவில்லையா? தீனி தின்கிற பக்கத்தில் வால் இருக்கிறது. வால் இருக்கிற பக்கத்தில் தலை இருக்கிறது. இது புரியவில்லையா?" என்று கூறிவிட்டு கேலி செய்தானாம்!!



ஒரு தடவை, "அதிசய பூனை; 'செர்ரி' பழம் போல, சிவப்பாக யிருக்கும்." என்று விளம்பரம் செய்ய, இந்த அதிசய பூனையைக் காண மக்கள் அவன் கொட்டகைக்கு வந்தார்களாம். வந்து பார்த்தால், ஒரு கருப்புப் பூனை யிருந்ததாம்! "செர்ரி பழங்களில் சிலது கருப்பாக இல்லையோ?", என்றானும், கேட்டவர்களுக்கு.

பர்னம், என்கிற பெயர் அமெரிக்காவில் சர்க்கசுக்குப் பெயர் போனது என்றாலும் இவன் "பர்னம் அண்ட் பெய்லி சர்க்கஸ்" என்பதை அறுபது வயதுக்குமேல் ஆரம்பித்தானாம். இப்படி ஏன், இவன் எத்தனுனன் என்றால் சிறு வயதில் இவன் நம்பியவர்களெல்லாம் இவனை ஏமாற்றிவிட்டு ஓடியதுதானாம்!

இளமையில் தன் கைவசமிருந்த 5000 டாலர்களையும் கொண்டு 'கரடிக்கொழுப்பு' எனும் மருந்தை ஒரு கூட்டாளியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு தயாரித்தானாம், தலை வழுக்கையை இந்தக் கொழுப்பு போக்குமென்று கூட்டாளி சொனனானாம்! நம்பி இறங்கியதில், பணம் கையைவிட்டுப் போனதோடு, கூட்டாளி எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டானாம். பிறகு, படங்கள் போட்டு பைபிளை அச்சடித்து விற்க முயன்றான். அதிலும், 'ஏஜண்டுகள்' அவனை ஏமாற்றினார்களாம்! பிறகு கடிகாரம் செய்யும் தொழிலில் இறங்கி, கூட்டாளிகள் ஏமாற்றியதால், 'இன்சால்வென்ட்' கொடுக்க நேர்ந்ததாம்.

இப்படி, ஏமாந்த பிறகே, தானும் பிறரை ஏமாற்றினால்தான் வாழ முடியும் என்கிற எண்ணம் ஏற்பட்டதாம். முதல் முயற்சியாக, "எப்படிப் பணம் சம்பாதிப்பது?", என்று பிரசங்கம் செய்யக் கிளம்பினானும். இந்தப் பிரசங்கத்தைக் கேட்க இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களிலிருந்துகூட அழைப்பு வந்ததாம். ஒரு பிரசங்கத்துக்கு 200 டாலர் வாங்கினானும்.

அப்படி இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது, தன்னைப்பற்றிப் பிரமாதமான விளம்பரம்வரவேண்டுமென்றெண்ணி அவன் வெளியிட்ட செய்தி, மிக்க பரபரப்பை யூட்டியது. "ஷேக்ஸ்பியர் பிறந்த வீட்டை வாங்கி, அப்படியே அமெரிக்காவுக்கு கொண்டு போகிறேன்!", என்றானும். "அதெப்படி முடியும்?", என்று கேட்க, "விற்பதாக யிருந்தால், நான் வாங்கி, அதை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்து அமெரிக்காவுக்குக் கொண்டு போவேன்!" என்றான்.

இப்படி இலகுவான விதத்தில், விளம்பரம் பெற அவன் செய்த செயல்கள் பல. ஒரு பட்டுக்கொடியில், தன் பெயரை எழுதி, தன் வீட்டினுச்சியில் பறக்கச் செய்தானும். ஏனென்று பிறர் கேட்க, தான் வீட்டிலிருப்பது தன் நண்பர்களுக்குத் தெரிவிப்பதற்காக இப்படிச் செய்கிறேன் என்றானும்! பழமொழி உண்டல்லவா,'படித்தவன்பின்னாலும்பத்து பேர், பைத்தியத்தின் பின்னாலும் பத்துப்பேர்', என்று, இவனுடைய விசித்திரச் செயல்கள், இவனுக்குப் புகழைக் குவித்தன!!

தன்னுடைய சர்க்கசுக்கும், தனக்கும் விளம்பரம் வருவதற்காக ஒரு முறை ஒரு இரயிலடிக்குப் பக்கத்தில் தன் ஆள் ஒருவனிடம் ஒரு யானையைக் கட்டி நிலத்தில் உழச் சொன்னானும். அந்த ஆளிடம் இரயில் கால அட்டவணை ஒன்று கொடுத்து, இரயில் எப்போது வருகிறதோ அப்போதெல்லாம், சிவப்பு உடை உடுத்திக்கொண்டு யானையைக் கட்டி உழ வேண்டுமென்றானும்! இந்தச் செய்தி பரவவே, ஏராளமானோர் இந்தக் காட்சியைக் காண இரயிலில் வரலாயினராம். செய்தி, பத்திரிகைகளிலும் பரபரப்பாக வந்ததாம்.

ஒரு நாள், ஒரு பெரிய பெட்டி செய்து அதன் மீது, "நான் செத்த பிறகு திறக்கவும்", என்று எழுதி வைத்தானும். அவனுடைய தொழிலாளர்களுக்கெல்லாம், முதலாளி ஏதோ தங்களுக்கெல்லாம் தனககுப் பிறகு தருவதற்காக வைத்துப்போகிறார், என்று ஆனந்தமாக இருந்ததாம்! இந்தப் பேச்சு பரவவே, எல்லோரையும் அழைத்து, அந்தப் பெட்டியை உடைத்துக் காட்டினானும். அதில் என்ன இருந்தது தெரியுமா? அவனுடைய வாழ்க்கை வரலாறு.

பர்னம், மரணப் படுக்கையிலிருக்கும்போது, தான் செத்த பிறகு எழுதப்படும் அனுதாபச் செய்தி எப்படியிருக்கும் என்பதை அறிவதற்காக தன் ஆள் மூலம் நியூயார்க் ஏடு ஒன்றுக்கு மரணச் செய்தி அனுப்பிவிட்டு, மறுநாள் அது எழுதிய அனுதாபத்தைப் படித்து படித்து மகிழ்ந்தானும்.

இப்படிப்பட்டவன், உண்மையில் செத்தபோது, அமெரிக்கத் தலைவர் இறந்தால் வெளியிடா அளவுக்குச் செய்திகளைப்போட்டன அமெரிக்க ஏடுகள்! சாவதற்கு முன் இவன் பேசிய கடைசி வார்த்தை என்ன தெரியுமா—" ஏனய்யா, மானேஜர்! இன்று நமது சர்க்கசுக்கு என்ன வருமானம்?", என்பதுதான்!

—"வண்டு"

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.